
காலை முரசு

பக்கங்கள் - 33

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 15 புதன்கிழமை 01.10.2025 | அதிர்வு 61

## கொழும்பில் 2 ஆண்களின் சடலங்கள் மீட்பு!



கொழும்பின் இரு வேறு பகுதிகளில் மர்ம மான முறையில் உயிரி ழந்த ஆண்கள் 04▶



# தமிழருக்குச் சர்வதேச நீதி கோரும் உண்ணாவிரதத்தின் இறுதி நாளான இன்று சகலரும் பங்கேற்க வேண்டும்

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கம் பகிரங்க அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்களுக்குச் சர்வதேச நீதி கோரிய உண்ணாவிரதப் போராட்டத்தின் இறுதி நாளான இன்று புதன்கிழமை சகல தரப்பினரும் போராட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்று வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் உறவினர்களின் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

உள்நாட்டுப் பொறிமுறையை 06▶

## ஜெனிவா பறந்தார் சிறீதரன்

### பக்க நிகழ்வில் பங்கேற்பார்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொட ரின் பக்க நிகழ்வில் கலந்துகொள் வதற்காக நேற்று செவ்வாய்க்கிழமை ஜெனிவாவைச் சென்றடைந்த இலங் கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளு மன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன், அங்கு வேறு பல முக்கிய சந்திப்புக்களிலும் பங்கேற்கவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடர் கடந்த 8 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமானது. இந்தக் கூட்டத் 06▶



## எரிபொருள்களின் விலை குறைப்பு!

நாட்டில் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் எரிபொருள்களின் விலை மறுசீரமைக் கப்பட்டுள்ளது. 06▶




காங்கேசன்துறை துறைமுகத்தை அபி விருத்தி செய்வது வர்த்தக ரீதியில் பயனற்றது என்ற காரணத்தைக் காட்டி அந்த துறை முகத்தை மேம்படுத்துவதற்கு நன்கொடையாக இந்தியா வழங்கும் உதவி திட்டத்தையும் நிராகரித்து நிற்கின்றார் போக்குவரத்து, துறைமுகங்கள், விமானத்துறை அமைச்சர் பிமல் ரத்நாயக்க.

வடக்கில் தமிழர் பிரதேச அபிவிருத்திக்கு எதிரான அவரது பௌத்த - சிங்களப் பேரின வாத மேலாண்மைச் சிந்தனையின் வெளிப் பாடே இந்தக் காழ்ப்புணர்வு எதிர்ப்பு என்பது இப்போது அம்பலமாகி வருகிறது.

பலாலி சர்வதேச விமான நிலையத்தின் ஊடான போக்குவரத்து லாபகரமாக நடைபெறு கின்றது என்றும், அதன் மூலம் எட்டுக் கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகை முடிந்த ஆண் டில் வருமானமாகக் கிட்டியிருக்கின் 04▶





# நாட்டில் மீண்டெழும் இனவாத பிசாசுகள்

## யாழ்ப்பாணம் விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் மீள் ஆரம்பிப்பு நிகழ்வில் அமைச்சர் சந்திரசேகர் காட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

"இனவாதத்தைக் கிளப்பும் பிசாசுகள் மீண்டெழுந்துள்ளன. அதிகாரத்துக்காகச் சதி குறித்தும், சூழ்ச்சி பற்றியும் அவை மந்திராலோசனை நடந்துகின்றன. இந்தப் பிசாசுகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்க மக்கள் ஒன்றுபட வேண்டும்."

– இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் மீள் ஆரம்பிப்பு நிகழ்வு மட்டுவிலில் நேற்றுக் காலை கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், எஸ்.ஸ்ரீபவானந்தராசா, ஜெ.றஜீவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது உரையாற்றிய அமைச்சர் இ.சந்திரசேகர் கூறியவை வருமாறு:–

"பொருளாதார ரீதியில் இலங்கை வேகமாக முன்னேறி வருகின்றது எனத் தரவுகள் கூறுகின்றன. அதேபோல் இலஞ்ச, ஊழல் ஒழிக்கப்பட்டு வருகின்றது. இனவாதம் மற்றும் மதவாதம் என்பவற்றுக்கும் முடிவு கட்டப்பட்டு வருகின்றது.

இலங்கையில் வாழும் மூவின மக்களும் ஓரணியில் திரள வேண்டும். அவ்வாறு நடந்தால் இலகுவில் முன்னோக்கி சென்று விடலாம். இதனையே எமது ஜனாதிபதி தோழர் எல்லா இடங்களிலும் வலியுறுத்தி வருகின்றார்.

எனவே, இந்த இனவாதம் என்ற பிசாசுக்கு எமது நாட்டில் நிரந்தமாக முடிவு கட்ட வேண்டும். அதற்குரிய நடவடிக்கையை நாம் முன்னெடுக்கும் போது பழைய பிசாசுகள் மீண்டெழுவதை காண முடிகின்றது. பழைய திருடர்கள் ஓரணியில் திரண்டுள்ளனர். அதிகாரத்துக்கா சதி மற்றும் சூழ்ச்சிகளை செய்ய முடியுமா என்பது பற்றி ஆராய்கின்றனர்.

இனவாதத்தைத் தூண்டியேனும் தமது இருப்பைத் தக்க வைத்துக்கொள்ள முடியுமா என்பது பற்றியும் கதைக்கின்றனர். இது பற்றியே ரணிலும், மஹிந்தவும் அவரது வீட்டில் மந்திராலோசனை செய்கின்றனர். ரணிலும், மஹிந்தவும் நம்பர் வன் திருடர்கள். கடந்த காலங்களில் மத்திய வங்கியில் கொள்ளையடித்தவர்தான் ரணில். இந்நாட்டில் போதைப்பொருள் வியாபாரிகளைப் பாதுகாத்தவர்தான் மஹிந்த ராஜபக்ஷ.

எனவே, இவர்களிடமிருந்து நாட்டைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் எமது பிள்ளைகளின் எதிர்காலம் பாதுகாக்கப்படும்." – என்றார் அமைச்சர்.











# ஜப்பானின் முன்னணி வர்த்தகர்களுடன் ஜனாதிபதி அநுரகுமார கலந்துரையாடல்

ஜப்பான் அரசின் அழைப்பின்பேரில் அங்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்றுமுன்தினம் ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பின் தலைமையகத்தில் ஜப்பானின் முன்னணி வர்த்தகர்களுடன் வட்டமேசை கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பின் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி இஷிகுரோ நொரிஹிகோவின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஜப்பான் இலங்கை வர்த்தக ஒத்துழைப்புக் குழுவின் தலைவர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இலங்கையில் காணப்படும் புதிய முதலீட்டு வாய்ப்புகள் குறித்து இங்கு சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நாட்டில் முதலீட்டுக்கு ஏற்ற சூழலை உருவாக்கி மோசடி மற்றும் ஊழலை ஒழிப்பதற்கு தற்போதைய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் தெளிவுபடுத்தினார்.

இலங்கையின் முக்கிய பொருளாதார பங்காளியாக இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான வர்த்தக ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் அவசியத்தையும், அதன் ஊடாகப் பெறக்கூடிய பரஸ்பர நன்மைகள் குறித்தும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர், அவர்கள் குழு புகைப்படத்திலும் இணைந்துகொண்டனர்.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், மேல் மாகாண ஆளுநர் ஹனிஃப் யூசுப், ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் பிவிதுரு ஜனக் குமாரசிங்க, டிஜிட்டல் பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஹான்ஸ் விஜயசூரிய, பொருளாதாரம் குறித்த ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் துமிந்த ஹுலங்க முவ மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.











## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஆனால் காங்கேசன்துறை துறைமுகம் ஊடான போக்குவரத்தால் வருமானம் இல்லை என்ற அவரது கூற்றைக் கணக்கு விவரங்கள் மறுத்து நிற்கின்றன.

எப்போதும் கணக்குப்பிள்ளை பேசக் கூடாது, கணக்குப் புத்தகம் பேச வேண்டும் என்பார்கள். ஆனால் காங்கேசன்துறை துறைமுக விடயத்தில் கணக்குப் புத்தகத்தைப் பார்க்காமல் கணக்குப் பிள்ளைதான்

அதிகம் பேசுகின்றார் என்று தோன்றுகின்றது.

காங்கேசன்துறை - நாகப்பட்டினம் இடையிலான பயணிகள் கப்பல் சேவை கடந்த ஆண்டு ஓகஸ்ட் பதினாறாம் திகதி தொடங்கியது. இப்போது செப்டம்பர் 29ஆம் திகதி வரை சுமார் 13 மாதங்கள் (இடையில் கடல் கொந்தளிப்பான காலங்களில் படகு சேவை நடக்கவில்லை) மொத்தம் 195 போக்குவரத்து பயணங்களை அக்கப்பல் முன்னெடுத்து இருக்கிறது. இதன் மூலம் 13,056 பயணிகள் இலங்கைக்கு வந்திருக்கிறார்கள். இலங்கையில் இருந்து 13,045 பயணிகள் நாகப்பட்டினம் புறப்பட்டுச் சென்று இருக்கிறார்கள்.

இந்தப் பயணிகள் வருகை மற்றும் புறப்பாட்டின் போது ஒவ்வொன்றுக்கும் - ஒவ்வொரு பயணிக்கும் தலா ஐந்து டொலர் கட்டணத்தை வரியாக இலங்கை அரசு அறவிடுகின்றது. இதன்படி வருகையின் மூலம் 65 ஆயிரத்து 280 டொலரும் (ஏறத்தாழ 19.5 மில்லியன் ரூபாவும்), பயணிகள் புறப்பாடு மூலம் 65 ஆயிரத்து 225 டொலரும் (ஏறத்தாழ 19.5 மில்லியன் ரூபாவும்) இலங்கை அரசுக்குக் கிட்டி இருக்கின்றது.

தவிரவும், கடல் வாணிபத் திணைக்கள கட்டணமாக 13 ஆயிரத்து 56 பயணிகளுக்கு 65 ஆயிரத்து 250 டொலர் (ஏறத்தாழ 19.5 மில்லியன் ரூபா) கிட்டியுள்ளது.

இதன்படி பார்த்தால் கப்பல் போக்குவரத்து அமைச்சுக்கு இந்த படகு சேவையால் இந்த 13 மாத காலத்தில் சுமார் ஆறு கோடி ரூபா வரைக் கிட்டியிருக்கின்றது.

தவிரவும், மேலதிகமாக சுங்கத் தீர்வை மற்றும் உல்லாசப் பயணிகள் வருகை மூலமான அந்நிய செலாவணி என அரசுக்குக் கிட்டிய வருமானம் மேலும் பல மடங்காக இருக்கும்.

பலாலி விமான நிலையம் மூலம் எட்டு கோடி ரூபா வருமானத்தைப் பெறுகின்ற செயற்பாட்டை வரவேற்கின்ற அமைச்சர் பிமல் ரத்நாயக்க காங்கேசன்துறை ஊடான பயணிகள் கப்பல் போக்குவரத்து மூலம் 6 கோடி ரூபாவுக்கு மேல் வருமானம் கிடைத்திருப்பதை குறைத்து மதிப்பிட்டு, அந்தத் திட்டத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான துறைமுக மேம்பாட்டைக் குறை கூறுகின்றார்.

நாட்டுக்கும், வடக்குக்கும் பெரும் நன்மையும் வருமானமும் தரக்கூடிய திட்டத்தை வெறுமனே இனவாத போக்கில் பார்த்து, அவற்றை முறியடிக்கும் பேரினவாதத் தலைவர்களிடம் அதிகாரம் இருக்கும் வரை தமிழர் தேசம் தலை நிமிர்வது இக்கட்டாகத் தான் இருக்கும்.

* * *

'கிளீன் சிறிலங்கா' என்ற கோஷத்தோடு அதிகாரத்தைக் கைப்பற்றிய ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி கல்விப் புலத்தை - அதுவும் வடமாகாண கல்விப் புலத்தை - எவ்வளவு அசுத்தப்படுத்தியுள்ளது என்பதை இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் பகிரங்க அறிகை மூலம் அம்பலப்படுத்தியிருக்கின்றார்.

தேசிய மக்கள் சக்தியின் கல்வித் துறை தொடர்பான அடாவடித்தனத்தை அந்தப் பகிரங்க அறிக்கையில் கிழி கிழி எனக் கிழித்துத் தொங்க விட்டிருக்கின்றார் ஜோசப் ஸ்ராலின். அந்த அறிகையை அப்படியே தருகிறேன். அறிக்கை வருமாறு:-

வடமாகாண கல்விப் புலத்தில் என்றுமில்லாதவாறு அரசியல் தலையீடுகள் அதிகரித்துள்ளன. பதவி நியமனங்களின் போது தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களாகச் செயற்படுபவர்களுக்காக பரிந்துரைக்கும் செயற்பாடுகளில் அரசாங்க எம்.பிக்கள் செயற்படுகின்றனர்.

குறிப்பாக வன்னி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரின் தலையீடுகள் எல்லை மீறிச் செல்லுகின்றன.

பாடசாலை நிகழ்வுகளில் அரசியல்வாதிகள் செல்லக்கூடாது என்ற தேசிய மக்கள் சக்தியின் பிரதமரின் கூற்று வெறும் வாய்ப்பேச்சோடு நின்றுவிட்டது. தம்மை அரசாங்க ஆதரவாளர்களாகக் காட்டி, அரசாங்கத் தரப்பு அரசியல்வாதிகளப் பாடசாலைகளுக்கு அழைத்து குறுக்கு வழிகளில் வரப்பிரசாதங்களை அனுபவிக்கும் கீழ் நிலைக்கு சில பாடசாலை அதிபர்கள் செல்லும் நிலைக்கு, வடமாகாணத்தின் கல்வியில் அரசியல் தலையீடு அதிகரித்துள்ளது.

கடந்த காலங்களில் அமுக்கக் குழு போன்று நாடகமாடி, ஆசிரியர்களின் உரிமை பற்றிப் பேசியிருந்த ஜே.வி.பி. சார்பு ஆசிரியர் தொழிற்சங்கம், இன்று அரசாங்க அமைச்சர்களாலும் பிரதி அமைச்சர்களாலும் ஆள்கொள்ளப்பட்டு, ஏனைய தொழிற்சங்களை நசுக்கும் செயற்பாட்டிலும், கல்விப் புலத்தை அச்சுறுத்தும் செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றது.

பிரதி அமைச்சர்களாகவும் இருந்துகொண்டு, ஜே.வி.பி சார்பு ஆசிரியர் சங்கத்தின் செயலாளர்களாகவும் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தி, வடமாகாண ஆளுநருடன் அமைச்சர்களாக அமர்ந்துகொண்டு, தமது தொழிற்சங்கத்துடனான சந்திப்பு என்ற போர்வையில் வடமாகாண அதிகாரிகளை மிரட்டுகிறார்கள். இதுபோன்ற அரசியல் தலையீடுகள் முன்பிருந்த எந்த ஆட்சியிலும் நடைபெற்றதில்லை.

வடமாகாணத்தில் நடைபெறும் இடமாற்றங்களில் இடமாற்றச்சபை, மேன்முறையீட்டு சபையின் தீர்மானங்களை மீறி, அரசாங்க சார்பு தொழிற்சங்கமாகக் காட்டி அதிகாரிகளை அச்சுறுத்தி ஒருதலைப்பட்சமான முடிவுகளைத் திணிக்க முயல்கிறார்கள்.

இடமாற்றச் சபைகளின் தீர்மானங்களையே ஒருதலைப்பட்சமாக மாற்றியமைக்க செயற்படும் அதேவேளை, தமது ஆதரவாளர்களுக்கு இடமாற்ற மேன்முறையீட்டு சபையின் அங்கீகாரமின்றி, வடமாகாண ஆளுநரைக் கொண்டு இடமாற்றங்களை நிறுத்தும் செயற்பாடுகளிலும் ஈடுபடுகிறார்கள்.

வடமாகாண ஆளுநர் தன்னிச்சையாக இடமாற்றங்களை நிறுத்தும் அளவுக்கு அரசியல் தலையீடுகள் எல்லை மீறியுள்ளன. அத்துடன் அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுகிறார்கள்.

தமது பதவி நிலையை மீண்டும் குறுக்கு வழியில் பெற்றுக்கொள்வதற்காக வடமாகாணத்தின் கல்வித் திணைக்களத்திலுள்ள மேலதிக அதிகாரி ஒருவரும், தனது எதிர்கால வரப்பிரசாதங்களை பெறுவதற்காக, ஜே.வி.பி. சார்பு ஆசிரியர் தொழிற்சங்கத்தின் நிகழ்ச்சிநிரலில் செயற்படுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இடமாற்றங்கள் அரசியல் நிகழ்ச்சிநிரலில் நடக்கும் செயற்பாடுகளை இலங்கை ஆசிரியர் சங்கம் முற்றாக எதிர்க்கின்றது. இத்தகைய அரசியல் தலையீடுகளை எதிர்க்கும் முகமாக 2025.09.24ம் திகதிய வடமாகாணத்தில் சேவையின் தேவை கருதிய இடமாற்றம் தொடர்பான, இடமாற்ற சபையை இலங்கை ஆசிரியர் சங்கம் புறக்கணித்து வெளியேறியுள்ளது.

குறித்த சில முறைகேடுகள் மற்றும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் சட்ட நடவடிக்கைகளைமுன்னெடுக்கவுள்ளோம். இடமாற்றங்களில் அரசியல் தலையீடுகள்முற்றாகதவிர்க்கப்படவேண்டும். இதுபோன்ற செயற்பாடுகள் தொடருமாயின் இலங்கை ஆசிரியர் சங்கம் பரந்துபட்ட தொழிற்சங்க செயற்பாடுகளையும் முன்னெடுக்கும். - என்று அறிக்கையில் உள்ளது.

அதிகாரம் கைக்குக் கிடைத்தால் சண்டப் பிரசண்டம்தான்...!

---

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவரின் சடலங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இங்குருகடே சந்திக்கருகில் உள்ள ஜாடி வாவியில் இருந்து மர்மமான முறையில் உயிரிழந்த அடையாளம் தெரியாத ஆண் ஒருவரது சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குப் பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் சடலத்தை மீட்டு விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சுமார் 35 தொடக்கம் 40 வயது மதிக்கத்தக்க 5 அடி 4 அங்குலம் உயரமான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவர் கறுப்பு நிற அரைக் காற்சட்டையும், கறுப்பு நிற மேற்சட்டையும் அணிந்துள்ளார் என்று விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தெஹிவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறிவர்தன வீதியில் உள்ள வீடொன்றில் மர்மமான முறையில் உயிரிழந்த ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 23 வயதுடைய தெஹிவளை பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# நிப்பொன் மன்றத்தின் ஸ்தாபகத் தலைவருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நேற்று கலந்துரையாடல்



ஜப்பானிய அரசின் அழைப்பின் பேரில் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நேற்று செவ்வாய்க்கிழமை காலை டோக்கியோவில் உள்ள இம்பீரியல் ஹோட்டலில் நிப்பொன் மன்றத்தின் ஸ்தாபகத் தலைவர் யொஹெய் சசகாவாவைச் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு யொஹெய் சசகாவா தனது தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதாக இதன்போது அவர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள 100 பாடசாலைகளின் புனரமைப்பு மற்றும் நவீனமயமாக்கலுக்கான எதிர்காலத் திட்டங்களையும் அவர் முன்வைத்தார்.

இலங்கை மக்களின் முன்னேற்றம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான முயற்சிகளுக்கும், இலங்கையில் சமூக சேவைக்கான அவரது நீண்டகால அர்ப்பணிப்புக்கும் யொஹெய் சசகாவாவுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது நன்றியைத் தெரிவித்தார். வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட பலர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.











# பருத்தித்துறையில் சட்டவிரோதமாக இயங்கிய இந்தியர்களின் ஜோதிட நிலையம் சுற்றிவளைப்பு

## மூவர் கைது

சுற்றுலா வீசா மூலம் இலங்கை வந்த இந்தியர்கள் நடத்திய சட்டவிரோத ஜோதிட நிலையம் பருத்தித்துறை பொலிஸாரால் நேற்று சுற்றி வளைக்கப்பட்டதுடன், மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை தும்பளை வீதியில் இந்த சட்டவிரோத ஜோதிட நிலையம் அமைத்து இயங்கி வந்துள்ளது.

இந் நிலையத்தினை இந்தியாவின் பெங்களூரை சேர்ந்த மூவரே நடாத்தி வந்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக தும்பளை பிரிதேச கிராம அலுவர் பருத்தித்துறை நகரசபை தவிசாளரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

இதனையடுத்து, நேற்று பருத்தித்துறை நகர பிதா நேரில் சென்று அவதானித்து மேற்படி இந்தியர்களை வெளியேறுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

ஆனாலும், தொடர்ந்தும் ஜோதிட நிலையம் இயங்கி வந்ததை அடுத்து நகரபிதா வின்சன் டீ டக்ளஸ் போல் பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இந்தியப் பிரஜைகளன் கடவுச் சீட்டை பரிசோதனை செய்த போது , அவர்கள் மூவரும் சுற்றுலா வீசாவில் நாட்டிற்குள் வந்துள்ளமை தெரியவத்தது.

இதனையடுத்து மூன்று இந்தியப் பிரஜைகளையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# இளைஞர்கள் இருவர் கோர விபத்தில் சாவு!

ஹொரவப்பத்தானை – கபுகொல்லாவ புகுலேவ சந்தியில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற தனியார் பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் இரண்டு இளைஞர்கள் உயிரிழுந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸுடன் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று ஆரம்ப கட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

விபத்தில் ஹொரவப்பொத்தானை- நெலுகொல்லாவ பகுதியைச் சேர்ந்த பாதில செஹான் (வயது 21) மற்றும் பிரவீன் காவிந்த இலங்கசிங்ஹ (வயது 20) ஆகிய இருவரே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் ஹொரவப்பொத்தானை பிரதேச வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

பஸ்ஸின் சாரதியைக் கைது செய்துள்ள ஹொரவப்பொத்தானை பொலிஸார், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழருக்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிராகரிக்கின்றோம், தமிழின அழிப்பு, காணாமல் ஆக்கப்படுதல், போர்க் குற்றங்கள், மனிதப் புதைகுழிகள் தொடர்பான விடயங்களுக்குச் சர்வதேச – சுயாதீன விசாரணையே வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் கடந்த 25ஆம் திகதி ஆரம்பமானது.

யாழ். செம்மணியில் அணையா விளக்கு போராட்டம் நடைபெற்ற இடத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் சுழற்சி முறையிலான இந்த உண்ணாவிரதப் போராட்டம் இன்று புதன்கிழமை நிறைவடைகின்றது.

போராட்டத்தின் 6ஆவது நாளான நேற்று போராட்ட ஏற்பாட்டாளர்கள் ஊடகங்கள் மத்தியில் கருத்து வெளியிடுகையில்,

“போராட்டத்தின் இறுதி நாளான இன்று புதன்கிழமை அனைத்துத் தரப்பினரும்பங்கேற்றுஎமதுகோரிக்கைகளுக்கு வலுச் சேர்க்க வேண்டும்.

போராட்டத்தின் இறுதியில் கோரிக்கைகள் அடங்கிய மனு வாசிக்கப்பட்டு, ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பி வைக்கப்படும்.” – என்று கூறினர்.

## எரிபொருள்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. புதிய விலை 335 ரூபாவாகும்.

ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 277 ரூபாவாக்கும்.

மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. புதிய விலை 180 ரூபாவாகும்.

ஒக்டேன் 92 ரக பெற்றோல் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை. ஒரு லீற்றர் பெற்றோல் 299 ரூபாவுக்கே விற்கப்படுகின்றது.

சுப்பர் டீசல் விலையில் மாற்றம் இல்லை. லீற்றர் ஒன்று 313 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது.

## ஜெனிவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடரில் புதிதாக நிறைவேற்றும் நோக்கில் பிரிட்டன் தலைமையில் கனடா, மாலாவி, மொன்டெனீக்ரோ மற்றும் வட மெசிடோனியா உள்ளிட்ட இணை அனுசரணை நாடுகளால் ‘இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்’ எனும் தலைப்பில் தயாரிக்கப்பட்ட இலங்கை தொடர்பான புதிய பிரேரணையின் முதலாவது வரைவு கடந்த 9 ஆம் திகதி வெளியிடப்பட்டதுடன், அதில் திருத்தங்கள் உள்வாங்கப்பட்ட முதலாவது மீளாய்வு வரைவு கடந்த வாரம் வெளியிடப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் எம்.பி., அங்கு நடைபெறவுள்ள பக்க நிகழ்வொன்றில் பங்கேற்கவுள்ளார்.

அதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினதும், பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளினதும் பிரதிநிதிகளுடன் சந்திப்புக்களை அவர் நடத்துவார் என்றும், அதன்போது தமிழர்களின் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சிறுவர், முதியோர் தினம்

சர்வதேச சிறுவர் தினம் மற்றும் சர்வதேச முதியோர் தினம் இரண்டும் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் முதலாம் திகதி - இன்றைய தினத்தில் - கொண்டாடப்படுகிறது.

சிறுவர்களிடையே புரிதலை ஏற்படுத்துவது, அவர்களைப் பாதுகாப்பது மற்றும் அவர்களின் உரிமைகளை உறுதி செய்வது ஆகிய நோக்கங்களுக்காக இந்த நாள் 1954 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் யோசனைப்படி பிரகடனப்படுத்தப்பட்டது.

சமூகத்தின் எதிர்காலத்தையும் பாரம்பரியத்தையும் வடிவமைப்பதில் முதியோர் வகிக்கும் முக்கியப் பங்கை நினைவூட்டுவதோடு, அவர்களுக்கு ஆதரவளித்து கௌரவிப்பதை இலக்காகக் கொண்டு சர்வதேச முதியோர் தினம் 1990 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அவையால் பிரகடனப்படுத்தப்பட்டது.

வாழ்வின் ஆரம்பத்தில் - துளிர்க்கின்ற பருவத்தில் - இருக்கும் சிறுவர்களையும், அந்தத்தில் - பழுத்துப் போகின்ற பருவத்தில் - இருக்கும் முதியவர்களையும் தினத்தில் போற்றி, மதித்து, கௌரவித்து, அவர்களது உரிமைகளைப் பேணும் விடயத்தை வலியுறுத்துகின்றமையை ஒரே நாளில் கொண்டாடுவதற்குக் காரணம் உண்டு.

இந்த இருதரப்பினருமே சமூகத்தில் மிகவும் நலிவுற்ற - இன்னொரு சாராரில் தங்கி இருக்கின்ற - உதவி தேவைப்படுகின்ற - மக்களாவர். இன்னொரு தரப்பில் தங்கி இருப்பவர்கள் என்ற காரணத்தினால் துஷ்பிரயோகங்களுக்கும் பாதிப்புகளுக்கும் தொல்லைகளுக்கும் இம்சைகளுக்கும் ஆளாக கூடிய பலவீனமான தரப்பினராக இவர்கள் இருக்கின்றனர்.

இவர்களது உரிமைகளையும், கௌரவத்தையும், மதிப்பையும் பேணுவதன் மூலம் மட்டுமே மனித சமூகம் மேம்பட முடியும் என்ற காரணத்தினால்தான் இந்தத் தினம் முக்கியத்துவம் கொடுத்து அனுஷ்டிக்கப்படுகின்றது. அவர்கள் தொடர்பான உரித்துகளும், சமூகத்தின் கடப்பாடுகளும், பொறுப்புகளும் இந்தத் தினத்தை ஒட்டி வலியுறுத்திச் சுட்டி காட்டப்படுகின்றன.

உலகில் வாழ்கின்ற மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் சிறுவர்களாகக் காணப்படுகின்றனர். சிறுவர்கள் நாளைய தலைவர்கள். அவர்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் தங்கி வாழ்கின்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

அதே சமயம் உலக மக்கள் தொகையில் பத்தில் ஒருவர் அறுபது வயதுக்கு மேற்பட்டவராக இருக்கிறார். இது, 2050இல் ஐந்தில் ஒருவராகவும், 2150 இல் மூன்றில் ஒருவராகவும் இருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் முதியோர்களின் எண்ணிக்கை 2030ஆம் ஆண்டளவில் நூற்றுக்கு 22 வீதமாக அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவேதான், உலக ஜனத்தொகையில் கணிசமான பங்கை வகிக்கப் போகின்ற சிறுவர்களையும் முதியவர்களையும் ஒரே சமயத்தில் பேணி, மதித்து, போற்றி, அவர்களின் வாழ்வின் வளத்தை மேம்படுத்தி, உறுதிப்படுத்துவதன் வாயிலாக மனித குலத்தை மேம்படுத்த இந்த சர்வதேச தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அதன் தாற்பரியம் புரிந்து, சிறுவர்கள், முதியோர் தொடர்பான எங்கள் கடமைகளை - கடப்பாடுகளை - நாங்கள் ஆற்ற வேண்டும்.




# ஜப்பானிய வர்த்தக சமூகத்துக்கு ஜனாதிபதி அநுரகுமார அழைப்பு

ஜப்பான் – இலங்கை இரு தரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதோடு, தனியார் துறையை அதற்கு ஊக்குவிப்பதற்கும், இலங்கையில் வளர்ந்து வரும் பொருளாதார வாய்ப்புகளை ஆராய்வதற்கும் கைகோர்க்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஜப்பானிய வர்த்தக சமூகத்துக்கு அழைப்பு விடுத்தார்.

ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பு தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜப்பான் – இலங்கை வர்த்தக மன்றத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பு தலைமையகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஜப்பான் வர்த்தக சமூகத்தின் சுமார் 200 சிரேஷ்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டதோடு, ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பு, பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சு, ஜப்பானில் உள்ள இலங்கைத் தூதரகம், ஜப்பான் – இலங்கை வர்த்தக ஒத்துழைப்புக் குழு மற்றும் இலங்கை முதலீட்டுச் சபை ஆகியவை இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

இங்கு உரையாற்றிய டிஜிட்டல் பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஹான்ஸ் விஜயசூரிய, தேசிய டிஜிட்டல் மயமாக்கல் செயற்பாட்டிற்கான இலங்கை அரசாங்கத்தின் மூலோபாய முயற்சிகளைச் சுட்டிக்காட்டினார். தரவு மத்திய நிலைய அபிவிருத்திக்கான பிராந்திய மையமாக இலங்கையை நிலைநிறுத்துவதில் விசேட கவனம் செலுத்தி, டிஜிட்டல் பரிமாற்றம் மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளில் வளர்ச்சிக்கான வாய்ப்புகளையும் சுட்டிக்காட்டினார்.

மேலும், இலங்கை முதலீட்டுச் சபையினால் ஜப்பானிய முதலீட்டுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ள முக்கிய துறைகளான, உற்பத்தி, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் சுற்றுலாத்துறை உள்ளிட்டவைகள் குறித்து இங்கு விளக்கமளிக்கப்பட்டது. அதன் மூலம் வலுவான கொள்கை ஆதரவு மற்றும் முறையான செயல்முறைகள் ஊடாக முதலீட்டுத் தேவைகளுக்கான வசதிகளை வழங்குவதற்கு இலங்கையின் தயார் நிலையை எடுத்துக்காட்டியது.

இலங்கை வர்த்தகப் பிரதிநிதிகள் மற்றும் ஜப்பானிய வர்த்தக சமூகத்தின் பிரதிநிதிகளுக்கு இடையில் ஒரு கேந்திர வலையமைப்பு அமர்வும் இடம்பெற்றது.

இதற்கு இணையாக, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பின் தலைவர் இஷிகுரோ நொரிஹிகோ ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடலும் நடைபெற்றது.

இலங்கையுடன் தொடர்ச்சியான தொடர்பு மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் கூட்டாண்மைகளை அபிவிருத்தி செய்வதற்கு இரு நாடுகளின் வர்த்தக சமூகங்களுக்கிடையில் பாலமாக செயற்படுவதற்கான தனது அர்ப்பணிப்பை ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பின் தலைவர் இங்கு மீண்டும் உறுதிப்படுத்தினார்.

இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்தி, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், மேல் மாகாண ஆளுநர் ஹனீஃப் யூசுப், ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் பிவிதுரு ஜனக் குமாரசிங்க, பொருளாதாரம் குறித்த ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஜப்பானின் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில்துறை இராஜாங்க அமைச்சர் கலாநிதி ஒகுஷி மசாகி, ஜப்பான் – இலங்கை வர்த்தக ஒத்துழைப்புக் குழுவின் தலைவர் கொபயாஷி ஃபுமிஹிகோ மற்றும் இலங்கை வர்த்தக சபை மற்றும் ஜப்பான் – இலங்கை வர்த்தக மன்றத்தின் உயர்மட்ட வர்த்தகப் பிரதிநிதிகள் குழுவினரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.





# முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவுக்குப் பிணை

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவை பிணையில் விடுவிக்குமாறு கம்பஹா மேல் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

பிரசன்ன ரணவீர, கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பிரசன்ன ரணவீரவை 5 இலட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணை மற்றும் 5 இலட்சம் ரூபா பெறுமதியான ஐந்து சரீரப் பிணையில் விடுவிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.



அத்துடன் பிரசன்ன ரணவீரவுக்கு வெளிநாட்டுப் பயணத் தடையும் விதித்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டில் போலி ஆவணங்களைத் தயாரித்து கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள அரச காணி ஒன்றை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் பிரசன்ன ரணவீரவைக் கைது செய்யுமாறு நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

ஆனால், முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர நீதிமன்றத்தில் சரணடையாமல் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்று நீண்ட காலமாகத் தலைமறைவாக இருந்தார்.

பின்னர் அவர் கடந்த மே மாதம் 7 ஆம் திகதி நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்து, தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எதிர்வரும் சில தினங்களுக்கு வெப்பமான வானிலை நிலவும்

நாட்டின் பல பகுதிகளில் இன்று முதல் எதிர்வரும் சில தினங்களுக்கு வெப்பமான வானிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதன்படி வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் வெப்பமான வானிலை நிலவக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# ஒன்றரை மாத குழந்தையின் தாய் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

இடுப்பு வலி காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒன்றரை மாத குழந்தையின் தாயார் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் வற்றாப்பளை முள்ளியவளையைச் சேர்ந்த வினோதரன் வினோஜா (வயது 33) என்பவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடுப்பு வலி காரணமாக மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

சாட்சிகளை முள்ளியவளைப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# நாட்டில் ஐந்தில் ஒருவருக்கு ஒரு வகையான மனநோய்

நாட்டிலுள்ள மக்களில் ஐந்தில் ஒருவருக்கு ஏதாவது ஒரு வகையான மனநோய் இருப்பதாக சிரேஷ்ட மனநல மருத்துவர் சஞ்சீவன அமரசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய மனநல நிறுவனத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் இந்த உண்மைகளை வெளிப்படுத்தினார்.

அதன்படி, நாட்டில் பதிவான தற்கொலைகளில் 50 சதவீதம் மன நோய்களால் ஏற்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

ஒவ்வொரு நாளும் 8 பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர் எனவும், இது வருடத்திற்கு சுமார் 3200 ஆகக் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

பெரும்பாலான இளைஞர்கள் மனச்சோர்வு எனப்படும் பெரிய மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிய வந்துள்ளது.

கைத்தொலைபேசிகளுக்கு அடிமையாதல், கஞ்சா மற்றும் ஐஸ் பயன்பாடு போன்ற நிலைமைகளின் அதிகரிப்பு மனநோய்கள் அதிகரிப்பதற்கு வழிவகுத்துள்ளதாகவும், மதுவுக்கு அதிக நாட்டம் கொண்டவர்களும் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் மருத்துவர் சஞ்சீவன அமரசிங்க தெரிவித்துள்ளார்.





# விளாவட்டவான் ஸ்ரீ வீரமாகாளியம்மனின் வருடாந்த திருச்சடங்கு உற்சவ பெருவிழா

மட்டக்களப்பு – விளாவட்டவான் அருள்மிகு ஸ்ரீ வீரமா காளியம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு உற்சவ பெருவிழா நேற்று பாற்குட பவணியுடன் ஆரம்பமானது.

நேற்று காலை நாவற்காடு அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து விஷேட பூஜைகளுடன் ஆரம்பமான பாற்குடபவனியானது பிரதான வீதியின் ஊடாக 'ஓம் சக்தி ஓம் பராசக்தி' என உச்சரித்தவாறு அடியார்கள் தமது சிரசில் பாற்குடங்களை சுமந்துவந்து அன்னை ஸ்ரீ வீரமா காளியம் பாளுக்கு பாலாபிஷேகம் செய்தனர்.

பாலாபிஷேகத்தினை தொடர்ந்து அன்னை ஸ்ரீ வீரமா காளியம்பாளுக்கு விஷேட பூஜைகளும் இடம்பெற்றிருந்தது.

மூலவர் கர்ப்ப கிரகத்திலே இலங்கையில் முதல் முறையாக ஆறு அடி உயரத்தில் கருங்கல் திருவாசியுடன் விக்ரகம் அமையப்பெற்ற சிறப்பினை கொண்ட விளாவட்டவான் ஸ்ரீ விரமா காளியம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு பெருவிழா எதிர்வரும் 7ஆம் திகதி அதிகாலை திருப்பள்ளையம் மற்றும் தீ மிதிப்புடன் இனிதே நிறைவடைய இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.





# தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தில் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திர விநியோகம்

நுகேகொடையில் உள்ள தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தில் இருந்து நேற்று முதல் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நபரொருவர் தமக்கான சாரதி அனும திப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கான மருத்துவச் சான்றிதழைப் பெற்ற பின்னர் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியும் என மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித் துள்ளார்.

பொதுமக்கள் பல மணித்தியாலங்க ளாக நீண்ட வரிசையில் காத்திருத்தல்,




மோசடி செய்யும் நபர்களிடம் சிக்குதல் ஆகிய பிரச்சினைகளை கருத்திற் கொண்டு நுகேகொடையிலுள்ள தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தில் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரத்தில் ஏதேனும் மாற்றங்கள் செய்ய வேண்டுமாயின், வேரஹெர அல்லது மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஏனைய அலுவலகங்களுக்கு சென்று அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள நேரிடும்.

மாற்றங்கள் ஏதும் இல்லையெனின், தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தை தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவ னத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

எதிர்வரும் நாள்களில் சாரதி அனு மதிப்பத்திரத்தை மேற்படி நிறுவனத் திலேயே விநியோகிப்பதற்கு திட்டமிட் டுள்ளதாக மோட்டார் வாகன போக்கு வரத்து ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.



# புலோலி வட கிழக்கில் விளையாட்டுப் போட்டி

புலோலி வட கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

இந்த விளையாட்டுப் போட்டி, யாழ்ப்பாணம், புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலை மைதானத்தில் சங்கத் தலைவி திருமதி அ. சிந்துஜா தலைமையில் இடம்பெற்றது.

பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயசந்திரமூர்த்தி, சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலாளர் ந.திருலிங்கநாதன், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் வே. உதயமோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் ப. இராமேஸ்வரன், பருத்தித்துறை உதவி பிரதேச செயலாளர் ப.தயானந்தன், கனடாவின் ஊரும் உறவும் அமைப்பு





இணைப்பாளர் ந.ராஜன், புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலை அதிபர் மு.விஜயகுமார், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.வாசுதேவன், புலோலி வடக்கு ஜே/408 கிராமசேவகர் தி. ரங்கநாதன், பிரதேச சபை உறுப்பினர் சி. அருள்ரூபன், நகர சபை உறுப்பினர் ம.அனல்ரெஜி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் சிறப்பம்சமாக விருந்தினர்களிற்கான முட்டியுடைத்தல் போட்டியில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ந. திருலிங்கநாதன் உள்ளிட்ட ஆர்வத்துடன் பங்குபற்றினர்.





# யாழ்.மயிலிட்டி வீரமாணிக்கன் தேவன்துறை கண்ணகி அம்மன் ஆலய மானம்பூ திருவிழா

யாழ்.மயிலிட்டி வீரமாணிக்கன் தேவன்துறை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயத்தில் மானம்பூ திருவிழா நாளை வெகு சிறப்பான முறையில் இடம்பெற உள்ளது.

நவராத்திரி பூசை வழிபாடுகள் கடந்த 22 ஆம் திகதமி முதல் ஆரம்பமாகி இடம்பெற்று வரும் நிலையில் இறுதி நாளாகிய நாளை வியாழக்கிழமை விஜயதசமி (மானம்பூ) திருவிழா இடம்பெற உள்ளது.

பகல் 2.00 மணிக்கு பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி இடம்பெற உள்ள நிலையில், அடியவர்களது நலன்கருதி பருத்தித்துறையில் இருந்து நாளை நண்பகல் 1.30 மணிக்கு விசேட பஸ் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# ஆயுத பூஜை!

“இருள் நீக்கி ஒளி பரவட்டும்” எனும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இந்துக்களால் கொண்டாடப்படும் ஒரு முக்கியமான பண்டிகையாக நவராத்திரி காணப்படுகின்றது.

நவராத்திரி என்பதன் பொருள் “நவ” என்பது ஒன்பது என்றும், “இராத்திரி” என்றால் இரவு எனவும் பொருள் கொள்ளப்பட்டு ஒன்பது இரவுகளைக் கொண்டது நவராத்திரி எனப்படுகின்றது. நவராத்திரியானது புரட்டாதி மாதத்தில் வரும் அமாவாசைக்கு அடுத்த நாள் பிரதமை திதியில் தொடங்கி ஒன்பது நாள்கள் வளர்பிறையில் கொண்டாடப்படுகின்றது. இதனை “சாரதாநவராத்திரி” எனவும் அழைக்கப்படுகின்றது. ஒன்பது நாள்களும் ஆதிபராசக்தியின் அம்சமான துர்க்கை அம்மனை வழிபடுவதே பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது.

நவராத்திரி விழா கொண்டாடப்படுவதன் பின்னணியாக, எருமை உருவம் கொண்ட மகிஷாசுரன் என்பவன் பிரம்மாவை நோக்கி கடும் தவம் செய்து, அதன் பயனாகத் தேவர்கள், முனிவர்கள், என ஆண்களால் தனக்கு மரணம் ஏற்படக்கூடாது என்ற வரத்தைப்பெற்றுக் கொண்டான். இதனால் தேவர்கள், முனிவர்கள், மனிதர்கள் அனைவருமே துன்புறுத்தப் பட்டார்கள். மகிஷாசூரனை அழிக்க பிரம்மா, விஷ்ணு, சிவன் உள்ளிட்ட முப்பெரும் தேவர்களும் இணைந்து தம் சக்தியை ஒரு திரளாக உருவாக்கினர். திரண்ட சக்தியில் இருந்து துர்கா தேவி தோன்றினாள். துர்க்கை மகிஷாசூரனுடன் ஒன்பது நாள்கள் போர் புரிந்து பத்தாம் நாள் விஜயதசமியன்று அவனை வதம் செய்து உலகைக் காத்தாள். இந்த வெற்றியை நினைவு கூறும் வகையில் தீமையை அழித்து நன்மையை நிலைநாட்டிய தேவியை போற்றும் வகையிலும் நவராத்திரி கொண்டாடப்படுகிறது.

நவராத்திரியின் முதல் நாள் கும்பம் வைத்து பூஜைகள் ஆரம்பிக்கப்படுகின்றது. முதல் மூன்று நாள்களும் தீமை, தடை, எதிர்மறையான குணங்கள், அகங்காரம்,கோபம் ஆகியவற்றை அழிக்கும் ஆற்றலை கொண்ட “மலைமகள்” துர்கா தேவி வழிபடப்படுகின்றது. அடுத்து வருகின்ற மூன்று நாள்களும் செல்வம் மற்றும் சுபிட்சத்தை பெற்றுக்கொள்ள “அலைமகள்” இலட்சுமி தேவியை வழிபடுகின்றனர். வீரத்தைப் பெற்ற பின் வாழ்க்கையை முழுமையாக வாழ தேவையான செல்வத்தை பெறுவதைக் குறிக்கிறது. வீட்டில் பொன், பொருள், தானியவளம் பெருகும். இறுதி மூன்று நாள்களும் “கலைமகள்” சரஸ்வதி தேவியை நோக்கி ஞானம், கலைகள் வேண்டி வழிபடப்படுகின்றது. வீரம், செல்வத்தைச் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள ஞானம் தேவைப்படுகிறது.

நவராத்திரியின் சிறப்பு அம்சங்களாக கொலு வைத்தல், சுண்டல் மற்றும் தாம்பூலம் கொடுத்தல், சரஸ்வதி பூஜை, விஜயதசமி போன்றன இடம் பெறுகின்றன. கொலுவைத்தல் என்பது நவராத்திரியின் மிக முக்கியமான ஒரு பாரம்பரியங்களில் ஒன்றாக காணப்படுகின்றது.

முப்பெரும் தேவியர்கள் உட்பட பல தெய்வங்கள் மற்றும் மனித வாழ்வின் படிநிலைகளை காட்டும் பொம்மைகளைவைத்துபடிகள்அலங்கரிக்கப்படுகின்றது.

ஒன்பது படிகள் வைத்து வழிபடப்படுகின்றது. மனித வாழ்வின் பரிணாம வளர்ச்சிக்கு தேவையான அடிப்படை சக்திகளை பெறுவதே இப்படிகளின் உடைய தத்துவார்த்த கருத்தாக அமைகின்றது. முதலாவது படியில் ஓரறிவு படைத்த புல், செடி, கொடி, மரங்கள், தாவரங்கள் போன்றன வைக்கப்படும் இவை பிரபஞ்சம் தந்த முதல் நிலையான நிலைத்த தன்மையை குறிக்கின்றது.

இரண்டாவது படி ஈரறிவு கொண்ட சங்கு, சிற்பி, நத்தை போன்ற நீர்வாழ் உயிரினங்களை குறிக்கின்றது. இவை சுவை உணர்ந்து நகருகின்ற உயிரினங்கள்

தொடர்ச்சி▼




# ஆயுத பூஜை!

தொடர்ச்சி▲

என்ற தத்துவத்தை குறிக்கின்றது.

மூன்றாவது படி மூவறிவு கொண்ட எறும்பு, கரையான் என வாசனை அறியும் உயிர்கள் வைக்கப்படும்.

நான்காவது படி நண்டு, வண்டு, சிலந்தி போன்ற ஊர்வன வைக்கப்பட்டிருக்கும். பார்வையை அறியும் உயிர்களின் திறன் வளர்ச்சி பற்றி பேசுவதாக இருக்கின்றது.

ஐந்தாவது படி பறவைகள், விலங்குகள் வைக்கப்படும். கேட்கும் அறிவு கொண்டவை, உணர்ச்சி வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது.

ஆறாவது படி ஆறறிவு படைத்த மனித பொம்மைகள் வைக்கப்படும். பகுத்தறிவு கொண்ட மனித வாழ்வு முயற்சி மற்றும் செயற்பாடு பற்றிய தத்துவத்தை குறிக்கின்றது.

ஏழாவது படி மகான்கள், ஆச்சாரியர்கள், தலைவர்களின் கொழு வைக்கப்பட்டிருக்கும். மனிதன் தன்னை உயர்த்திக் கொள்ளும் நிலை ஞானத்தை தேடும் நிலையை குறிக்கின்றது.

எட்டாவது படி தேவர்கள், அஷ்டதிக்கு பாலகர்கள் வடிவங்கள். இயற்கையையும் உலகையும் கட்டுப்படுத்துகின்ற ஆற்றல் அருள், பெறும் நிலையை குறிக்கின்றது

ஒன்பதாவது படி முப்பெரும் தேவியர் துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி மற்றும் மும்மூர்த்திகள் கலசம் வைக்கப்படும். ஆதிபராசக்தி எல்லாவற்றுக்கும் ஆதாரமான மூல சக்தி இறுதி முக்தி நிலை என்பதை குறிக்கின்றது.

கொலு வைத்திருக்கும் ஒவ்வொருவரும் வாழ்வில் தீய சக்திகளை அழித்து செல்வத்தை ஈட்டி ஞானத்தை அடைந்து முக்தி நிலையை அடைய வேண்டும் என்பதே நவராத்திரி வழிபாட்டின் உள்ளார்ந்த அர்த்தமாகக் காணப்படுகின்றது.

ஒவ்வொரு வீட்டிலும் தினசரி வரும் சுமங்கல பெண்களுக்கு வெற்றிலை பாக்கு, மஞ்சள், குங்குமம், பூ மற்றும் அன்றைய நாளுக்குரிய பிரசாதத்தை கொடுத்து மகிழ்வர்.

சரஸ்வதி பூஜை ஒன்பதாம் நாள் கல்விக்கு உரிய கடவுளான சரஸ்வதி தேவிக்குரியது அதன் போது தொழில் புரிகின்ற நபர்கள் தங்களுடைய தொழிலுக்கு உதவுகின்ற பொருள்களை வைத்து வழிபடுவர். உழைப்பைக் கொடுக்கும் கருவிக்கும் அறிவை கொடுக்கும் புத்தகங்களுக்கும் நன்றி செலுத்தும் நாளாக இது பார்க்கப்படுகின்றது.

இறுதியாக பத்தாவது நாள் விஜயதசமி கொண்டாடப்படுகின்றது. விஜயதசமி அன்று புதிய நற்காரியங்கள் ஆரம்பித்தல், புதிய கலைகள் கற்றுக் கொள்ளல், ஏடு தொடக்குதல், தொழில் தொடங்குதல், புதிய பொருள்களை வாங்குதல் போன்றன மக்களால் பின்பற்றப்படுகின்றன.

இந்த நவராத்திரி விழாவானது சமூகத்தில் மனித முன்னேற்றம், ஒற்றுமை, சமத்துவம், பெண்ணின் சக்திக்கு மரியாதை, கல்வி மற்றும் கலைக்கு மரியாதை போன்ற பண்பை வளர்க்கின்றது. தனி நபர்களுக்கும் ஆற்றல், மன உறுதி பெறல், அறிவு, ஆரோக்கியம், ஒழுக்கம், விரோதம் நீங்குதல் போன்றவற்றை வழங்குகின்றது.

இது மட்டுமின்றி பொருளாதார ரீதியாக வர்த்தகப் பொருள்கள், கைவினைப் பொருள்கள், புத்தாடை மற்றும் பரிசில்கள் விற்கப்படுதல், சுண்டல் தானியங்களுக்கு உரிய பொருள்கள் விற்றல் போன்றவற்றால் தொழில்துறையினருக்கு உற்சாகத்தை ஏற்படுவதாகவும் அமைகின்றது.

"மாற்றம் ஒன்றே மாறாதது" என்பதற்கு இணங்க பாரம்பரிய முறையில் இருந்து நவராத்திரி விழா முற்றாக மாறுபட்டிருந்தாலும் அவற்றின் மாற்றம் புத்தகங்களில் மட்டும் தங்கிவிடாமல் இணையத்தின் எல்லையற்ற அறிவியலில் வியாபித்துள்ளது. ஒரு மென்பொருள் உருவாக்குனரின் கம்பியூட்டரும், ஒரு அறுவை சிகிச்சை நிபுணரின் கத்தியும், ஒரு விவசாயின் கலப்பையும் , இந்த நாளில் சமமாக கொண்டாடப்பட வேண்டும். அவை அனைத்தும் மனித உழைப்பின் அடையாளங்களே.

இன்று ஆயுத பூஜையின் போது வீடுகள், தொழில் புரியும் இடங்கள், வைத்திய சாலைகள், தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் போன்ற இடங்களில் சிறப்பான பூஜை வழிபாடுகள் இடம் பெறும். இதன் போது உறவினர்கள் வீட்டிற்கு அழைக்கப்பட்டு பிரசாதங்கள் பகிர்ந்து உண்ணப்படும், குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். விடுதிகளில் தங்கி இருக்கும் மாணவர்கள் அருகில் உள்ள ஆலயங்களில் கல்வி பயிலுகின்ற நிலையங்களில் கலை நிகழ்வுகளோடு ஆயுத பூஜையை சிறப்பாக கொண்டாடுவர். புதிய தொழில் ஆரம்பிப்பதற்கான நாளாக இருப்பதால் அதிகளமான புதிய கடைகள் திறப்பதற்காக காத்திருந்த மக்கள் இன்றைய தினம் மகிழ்ச்சியாக தமது கடைகளை திறந்து கொள்வர்.

இந்த சமயத்தின் முக்கியமான நிகழ்வான நவராத்திரி காலப் பகுதி என்பது சமூக ரீதியிலும் தனிமனித ரீதியிலும் நல்லதொரு மாற்றத்தை செய்கின்றது. அன்று தொடக்கம் இன்று வரை.

**செ. அனுத்திரா,**
ஊடக கற்கைகள் துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.



# தத்துவமும் வாழ்வியலும் நிறைந்ததே நவராத்திரி...!

தாயைத் தெய்வமாக வணங்கும் முறை எமது பாரம்பரியமானதாகும். அதனால்தான் “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்று அன்னைக்கு முதலிடம் அளித்திருப்பதைக் காண்கின்றோம். “தாய் சொல்லைத் தட்டாதே” என்கின்றோம். பூமியைய் தாய் என்கின்றோம் . பொறுமையைத் தாய் என்கின்றோம். கருணையைத் தாய் என்கின்றோம். கங்கைகளையும் பெண்மையின் நிலையில் கண்டு தாய் என்றே போற்றி நிற்கின்றோம்.

உலகிலே உயர்ந்து நிற்பது எதுவென்றாய் அது தாய்மைதான். தாய்மைக்கு ஈடாக எதுவுமே இல்லை எனலாம். இதனால்தான் தாய்மையை தெய்வத்துக்கு ஒப்பிட்டு சக்தி வழிபாடே தொடங்கியது எனலாம் . உலக இயக்கத்துக்கு சக்தியே முதன்மையானது. சக்தி இல்லாவிட்டால் உலக இயக்கமே அற்றுவிடும். இந்த அடிப்படையில் சக்தியை மையமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டதே நவராத்திரி ஆகும்.

சிவனுக்கு ஒரு ராத்திரி சிவராத்திரி. ஆனால் சக்திக்கு ஒன்பது ராத்திரிகள். அதுதான் நவராத்திரி. அனைத்து இயக்கங்களுக்கும் ஆதார சக்தியாக அம்பிகை விளங்குவதால் ஒன்பது ராத்திரிகள் அமைந்துவிட்டன என்றுதான் எண்ண முடிகிறது.

நவராத்திரி எப்பொழு ஆரம்பிக்கப்பட்டது என்று பார்க்கும் பொழுது – பாரத காலம், இராமாயண காலம் வந்து நிற்கிறது. நீண்ட காலமாகவே நவராத்திரி கைக்கொள்ளப் பட்டு வந்திருக்கிறது என்பது தெரிய வருகிறது.

நவராத்திரி என்பது வருஷத்தில் நான்கு முறை வருவதைக் காண்கிறோம். தைமாதத்தில் வருவது மஹா நவராத்திரி , பங்குனியில் வருவது வஸந்த நவராத்திரி, ஆனியில் வருவது ஆஷாட நவராத்திரி, புரட்டாசியில் வருவது சாரதா நவராத்திரி. இந்த சாரதா நவராத்திரியையே இந்தியாவில் தமிழகத்திலும் , இலங்கையிலும் சிறப்பாகக் கொண்டாடி வருகிறார்கள் என்பது நோக்கத்தக்கதாகும்.

நவம் என்றால் ஒன்பது என்பது எண்ணிக்கையாகும். அது எண்ணிக்கை மட்டுமல்ல – புத்துணர்ச்சி என்னும் கருத்தும் இதில் அடங்கி நிற்கிறது எனலாம். கலைகளைப் போற்றி நின்று கொண்டாடும் வழிபாட்டு விழாவாக நவராத்திரி அமைகிறது எனலாம். கலைகளை முன்னிறுத்தி அனுஷ்டிக்கும் பொழுது அங்கு புத்துணர்வு மேலிடுவது இயல்பான ஒன்றல்லவா? இதனால் நவராத்திரி புத்துணர்வை நல்கிப் புதுத்தெம்பு பெருகி வாழ்வில் மகிழ்வினை நல்கிட உதவும் விரதமாய், காண்டாட்டமாய் அமைகிறது என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

எங்களின் சமயம் எங்களுடன் இணைந்தே வருகிறது. ஆனபடியால்தான் வளர்ந்து கொண்டே வருகிறதே அல்லாமல் தளர்வுண்டு போகாதிருக்கிறது எனலாம். காரணம் சமயத்தை வாழ்வியல் ஆக்கிக் கொண்டதே முக்கிய நிலை எனலாம். கடவுளையே உறவு முறையில் அழைத்து கடவுளுக்கே குடும்பமும் வைத்து வாழ்வியயோடு இணைத்து நிற்கும்

தொடர்ச்சி▼

# தத்துவமும் வாழ்வியலும் நிறைந்ததே நவராத்திரி...!

தொடர்ச்சி▲

சமயத்தை உலகில் எங்குமே காணமுடியாது. அதனால் வாழ்வுக்கு வாழ்வியலுக்கு எவை எல்லாம் இன்றியமையாதனவோ அவற்றை எல்லாம் இறையுடன் இணைத்து அவற்றுக்கு பெருமையும் பெறுமதியும் காட்டி நிற்பதுதான் எங்கள் சமயத்தின் உன்னதம் எனலாம்.

அந்த வகையில் நலம் தரும் நவராத்திரியும் வந்து அமைகிறது. வாழ்வினில் செம்மையாக வாழ எவையெல்லாம் எமக்குத் தேவை என்பதைத் தொட்டு நிற்பதுதான் நலம் தரும் நவராத்திரி எனலாம்.

ஆரோக்கியம் வேண்டும், பொருள் வேண்டும், நல்லறிவு வேண்டும். ஆரோக்கியம் என்னும் பொழுது வீரம் வருகிறது. பொருள் என்னும் பொழுது செல்வம் வருகிறது. அறிவு எனும் பொழுது கல்வி வருகிறது. கல்வியும், செல்வம், வீரமும் வேண்டிப் பிரார்த்தித்து நிற்பதுதான் நவராத்திரியாய் மலர்கிறது. வீரத்துடனும் , செல்வத்துடனும் அறிவு அதாவது கல்வியான இணைய வேண்டும். அப்படி இணைந்தால்தால் வீரமும் செல்வமும் ஒழுங்கான முறையில் பயனை அளிக்கும். அப்படி அமையும் பொழுது அங்கே வெற்றி என்னும் வெளிச்சம் பிரகாசமாய் வந்து நிற்கும். இதுதான் உண்மை. இதுதான் நிச்சயம். இதனை உணர்த்துவதாய் அமைவதுதான் நவராத்திரி. இந்த வெற்றியையே விஜயதசமி என்று கொண்டாடி மகிழ்கிறோம்.

வீரத்தை துர்க்கையாகவும் , செல்வத்தை இலக்குமியாகவும், கல்வியை சரஸ்வதியாகவும் எங்கள் சமயம் காட்டுகிறது. இங்கே காட்டப்படும் மூன்றுமே பெண்களாய் அதாவது சக்தியாய் இருப்பது நோக்கத்தக்கதாகும்.

பெண்மை என்றால் தாய்மை. பெண்மை என்றால் பொறுமை. பெண்மை அடங்கினால் மென்மை. பெண்மை பொங்கினால் வெம்மை. பெண்மைக்குள்ளே எல்லாமே அடக்கம். பெண்மைதான் இயக்கம். அதனால்தான் கல்வியை , செல்வத்தை , வீரத்தையும் வழங்கும் கடவுளர்களாக பெண்மை உருவாக்கப்பபட்டது. கல்வியை, செல்வத்தை, வீரத்தை இலகுவாகப் பெற்றுவிட முடியாது. முயற்சி வேண்டும். அதற்கு அளவில்லா பொறுமை வேண்டும். விடாத துணிவு வேண்டும். இவை அத்தனையும் பெண்மை என்னும் சக்தியிடம்தான் நிறைவுற்று இருக்கிறது. எனவேதான் முச்சக்திகளை மூன்று முக்கிய வாழ்வியல் முறைகளுக்கும் தெய்வமாக்கினார்கள்கள் எங்கள் முன்னோர்கள்.

அறிவுடன் செல்வமும் வீரமும் இணைந்து நின்றால் நிச்சயம் அங்கே வெற்றிதான். அறிவினை விட்ட செல்வமோ , வீரமோ வெற்றி என்னும் இலக்கினை அடையாது. பயனற்றே போய்விடும். இதனையே புராணங்கள் காட்டி நிற்கின்றன.

வாரணம் பொருத மார்பு – வரையினை எடுத்த தோள்கள் – சங்கரன் கொடுத்த வாள் அத்தனையும் இருந்தும் மாவீரன் என்னும் பெயர்பெற்ற செல்வாக்குடன் திகழ்ந்த இராவணன் ஏன் வீழ்ந்தான்? படைபலம் நிறைந்து , அரண்மனை செல்வாக்குடன் அரசாட்சியில் இருந்த துரியோதனன் ஏன் வீழ்ந்தான்? உரமும் வரமும் பெற்ற சூரன் ஏன் வீழ்ந்தான்? அறிவுடன் செல்வமும் வீரமும் அணையாது நின்றதே காரணம் என்று காப்பியங்கள் புராணங்கள் காட்டி நிற்கின்றன.

இறை சக்தியால் நாமெல்லாம் இயங்குகிறோம். இறைசக்தியே எமக்கு இயக்க சக்தியாகும். அந்தச் சக்தியே அறிவை செல்வத்தை ஆற்றலை அளிக்கிறது. அந்த அளவிட முடியாத சக்தி அளித்த ஆற்றலை அந்தச் சக்தியின் ஆசியுடன் வாழ்வில் கையாண்டால் வாழ்க்கை வளமாகும். வாழ்க்கை வையத்துள் வசந்தமாக அமையும். இப்படி வாழ்வியலோடு இணைந்த சக்தியாய் அமைவதுதான் நவராத்திரி ஆகும்.

கோவிலுக்குப் போய் கொண்டாடாமல் கோயிலுக்குப் போய் வழிபடாமல் வீட்டிலேயே இருந்து பாடிப்பரவி கைக்கொள்ளும் நிலையில் நவராத்திரி அமைந்திருக்கிறது.

கும்பம் வைத்து கொலு வைத்து கூடியிருந்து மலைமகளை , அலைமகளை கலைமகளைப் பாடிப்பரவும் விழாவாக நவராத்திரி அமையப் பெற்றிருக்கிறது.

ஏனைய விரதங்களைப் போல் அல்லாமல் நவராத்திரி விரதம் கலைகளின் சங்கமமாய் அமைந்திருக்கிறது என்பதால் அனைவராலும் தவறாமல் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது எனலாம்.

நவராத்திரியில் கொலு வைப்பது என்பது மிகவும் முக்கியமானதாகும். கொலு வைத்தல் என்பது அழகுக்குக்கோ அல்லது ஆடம்பரத்துக்கோ அல்ல. அந்தக் கொலு கூட வாழ்வியலின் தத்துவமேயாகும். ஒன்பது படிகள் வைத்து கொலு அமைக்கப்படுகிறது. ஒன்பது என்பது வெறும் எண்ணிக்கை அல்ல. அதிலும் அர்த்தமே நிறைந்திருக்கு. முதற்படியில் ஓரறிவு உயிரினப் பொம்மைகள், இரண்டாவது படியில் இரண்டறிவு உயிரினப் பொம்மைகள் மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது படியில் அந்த எண்ணிக்கை சார்ந்த உயிரின அடையாளங்கள், ஆறுவது படியில் மனித உருவப் பொம்மைகள், ஏழாவது படியில் மனிதனுக்கு அப்பாற்பட்ட ரிஷிகளின் பொம்மைகள் , எட்டாவது படியில் தேவர்கள், நவக்கிரகங்கள், ஒன்பதாவது படியில் இறைவனது பொம்மைகள் என்று கொலு வைப்பது வழக்கமாகும். இங்கு கொலு வைக்கப்பட்ட முறையான உயிர்களின் வளர்ச்சி நிலையினைக் காட்டுவதாக அமைகிறது எனலாம். மணிவாசகப் பெருமான திருவாசகத்தில் காட்டிய " புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி ....... கல்லாய் மனிதராய் .....முனிவராய் தேவராய் ...." என்பது நினைவுக்கு வருகிறதல்லவா ?

வணங்கும் கோவில் , வாழும் வீடு , கற்கும் பள்ளிக்கூடம், தொழில்புரியும் தொழிற்கூடம் , பணிமனைகள், அத்தனையும் கொண்டாடி மகிழும் விழாவாக விளங்குவது நவராத்திரி ஒன்றே எனலாம். பக்தியுடன் கூடிய பாட்டும் பக்தியுடன் கூடிய நடனங்களும் , பக்தியுடன் கூடிய ஒன்று கூடலும் இணையும் நிலை காணப்படுவதால் நலம் தரும் நவராத்திரி என்பது பொருத்தமாய் அமைகிறது அல்லவா ?

தனம் தரும், கல்வி தரும், ஒருநாளும் தளர்வு அறியா
மனம் தரும், தெய்வவடிவும் தரும், நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும், நல்லன எல்லாம் தரும், அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள், அபிராமி கடைக்கண்களே.



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

# நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் ஏடு துவக்குதலும் வகுப்புகளிற்கு புதிய மாணவர்களை சேர்த்தலும்

யாழ்ப்பாணம், நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் விஜயதசமி தினமான நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு ஆதீனமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் ஏடு துவக்கப்படும். அத்துடன் சிறுவர் வகுப்பு மற்றும் ஆன்மீக வகுப்புகளுக்கு புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர். தங்கள் பிள்ளைகளுக்கு ஏடு துவக்க விரும்புவோர் மற்றும் வகுப்புக்களில் இணைய விரும்புவோர் ஆதீன அலுவலகத்துடன் 077 222 0103 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளும்படி கோரபட்டுள்ளது.

# 14 ஆவது நாளாகவும் முத்து நகர் விவசாயிகள் நேற்றும் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டம்












(ஏ.எச்.ஹஸ்பர்)

சூரிய மின் சக்தி திட்டத்துக்காக அபகரிக்கப்பட்ட தங்கள் விவசாய நிலங்களை பெற்றுத் தரக் கோரி திருகோணமலை முத்து நகர் விவசாயிகள் 14 ஆவது நாளாகவும் நேற்று,

திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக சத்தியாக் கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"பொய் வேண்டாம்,எங்கள் நிலம் எங்களுக்கு வேண்டும்!", "விவசாயிகளை இப்படியா நடத்துவது?", "விவசாயிகளிடமிருந்து கொள்ளையடித்து கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட முத்து நகர் விளைநிலங்களை உடனடியாக திருப்பிக் கொடு!", "அரசே எங்களுக்கு சோறு போடும் நிலத்தை மீட்டுத் தா!" போன்ற பல வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் சத்தியாக்கிரகத்தில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கையில் –

"352 விவசாயிகளின் காணிகளைச் சூறையாடியுள்ளனர். இதனைப் பெற தொடர் போராட்டமாக 14 நாள்களைத் தாண்டியும் ஈடுபடுகிறோம் இது தொடர்பில் எங்களுக்காக அரச தரப்பில் இருந்தோ அரசியல்வாதிகளோ குரல் கொடுக்க முன்வரவில்லை. இதனை தொடர்ந்து பிரதமர் பத்து நாட்களுக்குள் முடிவைத் தருவதாகக் கூறினார். அந்த நம்பிக்கையோடு காத்திருக்கின்றோம்."
– என்றார்கள்.

# இன்றைய தமிழர் அரசியல் கோலங்கள் குறித்து ஒரு மூத்த பத்திரிகையாளரின் பார்வையில்...!

## வீரகத்தி தனபாலசிங்கத்தின் 'தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்' நூல் பற்றிய விமர்சனம்



இடதுசாரிச் சிந்தனை கொண்வராக தன்னை அடையாளப்படுத்துகின்றவரும் தேசிய இனப்பிரச்சினைக்கு சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை நிறைவுசெய்யக்கூடிய ரசியல் தீர்வொன்று கிடைக்கவேண்டுமென்ற அவாவுடன் தீவிரமாக அரசியல் ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வருபவருமான பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கத்தின் "தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்" என்கிற சிறிய அரசியல் ஆய்வு நூல் அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில்வெளியிட்டு வைக்கப்பட்டது.

எட்டுக் கட்டுரைகளை உள்ளடக்கி, எண்பது வரையான பக்கங்களைக் கொண்டதாக, மார்க்சியக் கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ள இந்த நூல் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்துவதாகவும் அதைச் சிங்கள மக்களின் சம்மதத்துடன் பெறுவதே நிலைபேறான தீர்வுக்கு வழிகோலும் எனச் சொல்வதாகவும் தமிழ்த் தேசிய இனத்திற்கான அதிகாரப் பரவலாக்கத்துக்கான முதற்படியாக மாகாண சபை முறையினை உறுதியாக முன்மொழிவதாகவும் தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமையை வேண்டி நிற்பதாயும் அதற்கு முட்டுக்கட்டையான விடயங்களை வன்மையாக எதிர்ப்பதாயும் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான இன்றைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீது விமர்சனங்களை அடுக்கிக்கொண்டே போவதாயும் அமைந்துள்ளது.

1983 கறுப்பு ஜுலைக்கு பிறகு கடந்துவிட்ட 42 வருடங்கள் என்ற தலைப்பில் அமைந்த முதலாவது கட்டுரையில் அக் கலவரங்களுக்கும் படுகொலைகள், அழிவுகளுக்கும் பின்னால் அன்றைய ஜே.ஆர். ஜெயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் ஆதரவும் ஆசீர்வாதமும் எவ்வாறு இருந்தது என்பதையும், இன்றுவரை அதற்காக அவர்கள் எந்தவித மனவருத்தத்தினையும் தெரிவிக்கத் தயாராக இல்லாத மெத்தனப் போக்கினையும் ஆதாரங்களுடன் தனபாலசிங்கம் வெளிப்படுத்துகின்றார்.


பதின்மூன்றாவது திருத்தத்தை தமிழர்கள் என்ன செய்யப்போகிறார்கள்? என்ற இரண்டாவது கட்டுரையில் மாகாண சபை முறைமையினை எதிர்க்கின்ற தமிழ்த் தரப்புகளைப் பார்த்து,விடுதலை புலிகளிடம் மாகாண சபை நிராகரித்து அதனைக் கடந்து, அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்கான ஆயுதப் போராட்ட வழி முறை இருந்தது, ஆனால், இப்போது உங்களிடம் என்ன வழி முறை உள்ளது? என்று அவர் கேள்வி எழுப்புகிறார்.

தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம் என்ற மூன்றாவது கட்டுரையில், அண்மையில் கடந்த வருடம் நடைபெற்ற தேர்தல்களில் தமிழ் அரசியல் கட்சிகள் எதிர்கொண்ட பின்னடைவு மற்றும் அதற்கான காரணங்கள் தொடர்பில் அவர் அலசி ஆராய்ந்துள்ளார்.

இலங்கைத் தமிழர் அரசியலில் இராஜவரோதயம் சம்பந்தனின் வகிபாகம் பற்றிய நான்காவது கட்டுரையில் இலங்கை வரலாற்றில் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்த இரண்டாவது தமிழரான சம்பந்தனின் பலங்கள் தொடர்பில் தனபாலசிங்கம் சிலாகித்திருப்பதுடன் அவர் இழைத்திருக்கக்கூடிய தவறுகளையும் சுட்டிக்காட்டுகிறார். சம்பந்தனின் மரணத்தை அடுத்து வெளிவந்த கட்டுரை என்பதால் பலவீனங்களை அலசுவது நாகரீகமாக அமையாது என ஆசிரியர் கருதியிருக்கிறார் போலும்.

இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாட்டில் மாற்றம் இல்லையானால், புதிய அரசியல் கலாசாரம் வெற்றுச் சுலோகமே என்ற ஐந்தாவது கட்டுரையில், இலங்கையில் வாழும் தேசிய சிறுபானமை இனங்களின் உரிமைகள் தொடர்பில் பேசுவதற்குக் கூடத் தயாரில்லாத, இன்றைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் போக்குத் தொடர்பிலானதனது காட்டமான விமர்சனங்களை ஆசிரியர் கொட்டித் தீர்த்திருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

2025 உள்ளூராட்சித் தேர்தல்களின் முடிவுகள் கூறிய செய்தி என்ற தலைப்பிலான ஆறாவது கட்டுரையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கான மக்களின் ஆதரவில் ஏற்பட்ட வீழ்ச்சி தொடர்பாகவும் தமிழ் அரசியல் கட்சிகளால் முழுமையாக மீட்சி அடைய முடியாமல் போனமை பற்றியும் தனபால




சிங்கம் ஆராய்ந்துள்ளார்.

2025 ஆகஸ்ட் ஹர்த்தால் கூறிய செய்தி என்ற ஏழாவது கட்டுரையில், கடந்த ஆகஸ்ட் மாதம் தமிழரசுக் கட்சியால் அழைப்பு விடுக்கப்பட்ட ஹர்த்தால் தமிழ்த் தேசியத் தரப்புகளின் தனிப்பட்ட அரசியல் குத்துவெட்டுக்களால் பிசுபிசுத்துப் போனமையை இன்றைய தமிழர் அரசியலை விளக்குவதற்கானதொரு சிறந்த உதாரணமாக அவர் விவரித்துள்ளார்.

புதிய அரசமைப்பின் உண்மையான நோக்கம் என்னவாக இருக்க வேண்டும்? – என்ற எட்டாவது கட்டுரையிலே, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீதான அவநம்பிக்கையை வெளிப்படுத்தும் ஆசிரியர், ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு தற்போது அவுஸ்திரேலியாவில் வசிக்கும் ஜே.வி.பி.யின் முன்னாள் பொதுச் செயலாளர் லயனல் போபகேயின் கருத்துக்களுடன் கட்டுரையை தனபாலசிங்கம் நிறைவுசெய்கிறார்.

"பத்திரிகையாளனாக தனிப்பட்ட உணர்ச்சி, விருப்பு வெறுப்புகள் மற்றும் கட்சி அரசியல் நிலைப்பாடுகளுக்கு அப்பால், மக்கள் நலன் சார்ந்து மட்டுமே

தொடர்ச்சி▼

# இன்றைய தமிழர் அரசியல் கோலங்கள் குறித்து ஒரு மூத்த பத்திரிகையாளரின் பார்வையில்...!

தொடர்ச்சி▲

என்னால் இயங்க முடியும், எழுத முடியும்" - என்று முன்னுரையில் கூறும் தனபாலசிங்கம் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றிக் கூறும் இந்த எட்டுக் கட்டுரைகளில் ஒரு இடத்தில்கூட, முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழ் தேசிய இனங்கள் பற்றிக் குறிப்பிடாமல் விட்டமை பாரிய கேள்வி ஒன்றைப் பதிலின்றியே விட்டுச் செல்கின்றது.

ஏனென்றால், அவர் வலியுறுத்தும் மாகாண சபை முறைமையில் வரும் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கு மாகாணத்தில், முஸ்லிம்கள் இன்னொரு பிரதான தேசிய இனமாக இருப்பதுடன், மலையக மக்களும் சிங்களப் பேரினவாத சக்திகளால் இன்று வரையில் பாரிய அச்சுறுத்தலுக்கும் புறக்கணிப்புக்கும் உள்ளாகி வருகின்றமை கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்களாகும்.

இலங்கை இனப்பிரச்சினையில் தலையீடு செய்யும் அந்நிய சக்திகள் தம்முடைய நலன்கள் சார்ந்தே செயற்படுவார்கள் என்பதை சுட்டிக்காட்டும் அவர் பலவீனமான நிலையில் இன்று இருக்கும் சிறுபான்மையினரான தமிழருக்கு சில நல்ல விடயங்களைச் செய்ய வாய்ப்புள்ளதாக நம்புவது முரண்பாடாகக் காணப்படுகின்றது.

இந்நூலின் அனைத்துக் கட்டுரைகளின் ஊடாக இழையோடுகின்ற ஒரு பிரதான விடயமாக, தேசிய இனப் பிரச்சினை என்ற ஒன்றே இலங்கையில் இல்லை எனச் சொல்லிவருகின்ற இன்றைய ஜே.வி.பி. ஃ தேசிய மக்கள் சக்தி

அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில், தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான அல்லது விடுதலை வேட்கைக்கான அரசியல் எத்தகைய அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றது என்பதையும் அவற்றை வெற்றி கொள்வதற்கான வழிமுறைகளைத் தனது நீண்ட ஊடக மற்றும் அரசியல் அனுபவங்களில் இருந்து கண்டடைய நூலா சிரியர்முயற்சிப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

- தேவ சபா தனுஜன் -

# வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையினால் 'கௌ பே' திட்டம் நேற்று ஆரம்பித்து வைப்பு










(கி.வசந்தன்)

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையினால் "கௌ பே" திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

டிஜிட்டல் பொருளாதார அமைச்சினால் ஒன்லைன் மூலமாக பணம் செலுத்தும் திட்டமான "கௌ பே" திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையும் இணைந்துள்ளது. இதன் அடிப்படையில் நேற்றிலிருந்து இந்த "கௌ பே" மூலமாக பொது மக்கள் தங்களது கட்டணங்களைச் செலுத்த முடியும்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் தவிசாளர் பா.பாலேந்திரனால் இந்த முறைமை அறிமுகப் படுத்தி வைக்கப்பட்டது.




# சர்வதேச முதியோர் தினம் - முதியோர் வாரம்

**- எஸ்.கீதபொன்கலன் -**

கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டகை அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற முதியோர்களுக்கான தேசிய செயலகம், இலங்கையில் வாழுகின்ற முதியோர்களின் உரிமைகள் மற்றும் அபிலாசைகள் என்பவற்றை பாதுகாப்பதற்கான பல்வேறு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அந்த வகையில் 2011 ஆம் ஆண்டின் ஐந்தாம் இலக்க சட்ட திருத்தத்தின் ஊடாக 2000 ஆம் ஆண்டின் ஒன்பதாம் இலக்க முதியோர்கள் உரிமைகளை பாதுகாப்பதற்கான சட்டத்திற்கு அமைய முதியோர் தேசிய பேரவை மற்றும் முதியோர்களுக்கான தேசிய செயலகம் என்பன ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

முதியோர்களின் பரந்த அறிவு, திறன், அனுபவங்கள் மற்றும் கண்ணியத்தைப் பாதுகாப்பது காலத்தின் தேவையாக உள்ளது.

இளையோர் சமுதாயத்தின் ஊடாக முதியோரை பாதுகாத்தல் போன்ற பல்வேறு நலத்திட்டங்கள் இன்று அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

"முதியோர்கள் தேசிய மற்றும் சர்வதேச நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்பவர்கள், எமது அபிலாஷைகள், நல்வாழ்வு மற்றும் உரிமைகள்" - என்பன 2025 ஆம் ஆண்டின் முதியோர் தின கருப்பொருளாக கொள்ளப்பட்டு பிரதமரின் தலைமையில் கொழும்பில் தேசிய வைபவம் இடம்பெற உள்ளது.

### இன்று ஒக்டோபர் முதலாம் திகதி

அதற்கு அமைவாக இன்று ஒக்டோபர் முதலாம் திகதி முதல் ஏழாம் திகதி வரை முதியோர் வாரமாக நாடு முழுவதும் கொண்டாடப்படுகின்றது. இந்த ஏழு நாள்களும் பல்வேறு தலைப்புகளின் கீழ் நிகழ்ச்சி திட்டங்களை நடைமுறைப்படுத்தி, மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலக ரீதியாக பல நிகழ்ச்சிகள் இடம் பெற இருக்கின்றன.

இன்று ஒக்டோபர் முதலாம் திகதி "எமது மரியாதைக்குரிய முதியவர்கள்" என்ற தலைப்பில் சிறப்பு நிகழ்வுகள் நடைபெற இருக்கின்றன. பிரதமரின் தலைமையில் நடைபெறுகின்ற இந்நிகழ்விலே நாட்டில் அதிகூடிய வயதினை கொண்ட மூதாட்டியை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறுவுள்ளது.

அடுத்த நிகழ்வாக அதிக எண்ணிக்கையிலான பிள்ளைகளை பெற்றெடுத்த தாய்மார்களை கௌரவித்தல் என்ற தலைப்பில் சுமார் 12 பிள்ளைகளுக்கு மேல் பெற்றெடுத்த தாய்மார்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் இன்றைய தினம் இடம்பெறும்.

மேலும் மாவட்ட செயலக ரீதியிலே மிக வினைத்திறனாகவும், செயல் திறனுடனும் இயங்கி வருகின்ற முதியோர் சங்கங்களை பாராட்டி கௌரவிக்கின்ற நிகழ்வும் நடைபெறவுள்ளது.

அத்துடன் பிரதேச செயலக ரீதியிலே இயங்கி வருகின்ற பிரதேச மட்ட சிறந்த முதியோர் அமைப்பைப் பாராட்டி கௌரவித்தலோடு அவர்களுக்கான பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

மாவட்ட மட்டத்திலே வினைத்திறனாக இயங்கி வருகின்ற முதியோர் பகல் நேர மையங்களைப் பாராட்டி கௌரவிப்பதோடு, அதன் அங்கத்தவர்களுக்கு பல பெறுமதியான பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

மேலும் மாவட்டமட்டத்தில் சிறந்த முறையில் செயற்பட்டு, தெரிவு செய்யப்பட்ட. சுயதொழில் முயற்சியாளரை பாராட்டி, கௌரவிக்கும் நிகழ்வும் பிரதமர் தலைமையில் நடைபெறும்.

இவை அனைத்தும் முதியோர்களுக்கான தேசிய செயலக பணிப்பாளரின் வழிகாட்டுதல், அமைச்சின் செயலாளர் மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர் ஆகியோரின் வழிகாட்டுதலோடு இடம்பெறவுள்ளன.

### ஒக்டோபர் இரண்டாம் திகதி

முதியோர் வார கொண்டாட்டத்தின் ஒக்டோபர் இரண்டாம் திகதி - நாளை - முதியோர்களுக்கான மருத்துவ நிகழ்ச்சி திட்டங்களை நடைமுறைப்படுத்தல் நடைபெறும். "ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சியான முதுமை பருவத்திற்காக" எனும் தொனிப்பொருளில் சமூகத்தின் சுகாதார பிரச்சனைகளை குறைப்பதன் மூலம்,உடல்,உள மற்றும் ஆரோக்கியமான முதுமை பருவத்திற்கு உதவும் நோக்கில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன் பிரதான நிகழ்ச்சி சுகாதாரம் மற்றும் ஆலோசனை ஊடக அமைப்பின் தலைமையில். முதியோர் செயலகத்தின் ஒருங்கிணைப்பில், சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சி திட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும்.

இதில் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் மருத்துவ சிகிச்சைகள் நடத்துதல்,

பிரதேச மட்டத்தில் போசாக்கு திட்டங்களை நடத்திச் செல்லல்,

மற்றும் பிரதேச கிராம மட்டத்தில் யோகா பயிற்சி திட்டங்களை நடத்துதல்,இவற்றின் ஊடாக உளவியல்

தொடர்ச்சி▼



# சர்வதேச முதியோர் தினம் - முதியோர் வாரம்

தொடர்ச்சி▲

மேம்பாடு மற்றும் மனதிற்கு புத்துணர்ச்சி ஊட்டும் இசை நிகழ்ச்சிகள் நடத்துதல் என்பன நடைபெறும்.

**ஒக்டோபர் மூன்றாம் திகதி**

"வலுவூட்டப்பட்ட செயல் திறனான முதுமைப் பருவத்தினை நோக்கி" - முதுமை பருவத்தில் உள்ள நோய் நிலைமைகளை அறிந்து கொள்ளல், வாழ்க்கை நிலைமைகளை தரப்படுத்தி தீர்மானங்களை மேற்கொள்ள உதவுதல்போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

**ஒக்டோபர் 4ஆம் திகதி**

"முதியவர்களுக்கு உதவும் கரம்" - முதியோர் சங்கங்களுக்கான நிதி திரட்டுதல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கொடி விற்பனை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளது.

இதன் பிரதான நிகழ்ச்சி திட்டம் ஒரு பிரதேச செயலகத்தை மையமாகக் கொண்டு ஊடகங்களின் பங்கேற்புடன் பிரதான நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இவ்வாறான நிகழ்ச்சிகள் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலக ரீதியிலும் இடம்பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**ஒக்டோபர் 5 ஆம் திகதி**

"புதிய தொழில்நுட்பத்துடன் முதியோர்கள்" -உலகளாவிய ரீதியிலே வேகமாக வளர்ந்து வருகின்ற தொழில்நுட்பத்தின் ஊடாக, முதியோர் சமுதாயத்தை வினை திறனாக பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கான, புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களை பயன்படுத்தி ஆரோக்கியமான வாழ்க்கை சந்தர்ப்பத்தை வழங்க இவ்வாறான நிகழ்ச்சிகள் உதவி அளிக்கும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சிகளும் மாவட்ட செயலக அறிவுறுத்தலுக்கு அமைய பிரதேச செயலகங்களில் இடம்பெறும்.

**ஒக்டோபர் 6 ஆம் திகதி**

"தர்மத்தால் வளர்க்கப்பட்ட முதியோர்கள்"- நாடளாவிய ரீதியில் இருக்கின்ற பௌத்த விகாரைகளில் அன்னதான நிகழ்ச்சிகளும்,பள்ளிவாசல்கள், கோவில்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் விகாரைகளை அடிப்படையாகக் கொண்டு சமய நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன.

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் ஊடாக ஒரு முதியோர் இல்லத்தை மையமாகக் கொண்டு மாவட்ட, பிரதேச, கிராமிய மட்ட முதியோர் சங்கங்களின் ஒத்துழைப்புடன் ஊடகங்களின் முன் நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன. அதற்கு அமைய மாவட்ட செயலகத்தினுடைய வழிகாட்டுதலின்படி பிரதேச செயலகங்களுக்கு ஊடாக இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறவுள்ளன .

**அக்டோபர் 7 ஆம் திகதி**

"கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டம்" -சிறந்த சமூக சூழல்,முதியோர் சமூகத்திற்கு சிறந்த மனநிலையை உருவாக்கும் நோக்கில் நிகழ்ச்சி திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

பிரதான நிகழ்ச்சி திட்டம் பாடசாலை மாணவர்களுக்கு மற்றும் இளைஞர்களுக்கு குழந்தைகளின் முதியோர் உலகம் என்ற கருப்பொருளில் நிகழ்ச்சி திட்டங்கள் இடம் பெறும்.

பிரதான நிகழ்ச்சிகளில் பாடசாலை மாணவர்களுக்கு முதியோர் உலகம் தொடர்பான விளக்கங்கள் இடம்பெறும்.

முதியோர் உளநிலைமைகள், நடத்தை முறை, எண்ணங்கள்,விருப்பங்கள் பற்றிய நேர் சீரான மனப்பான்மை, சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுதல் மற்றும் முதியோர்களுக்கு குடும்பத்தில் உள்ள விசேட பாராமரிப்பு மரியாதையும் வழங்கப்பட வேண்டும் என்பதை ஊடகங்கள் மூலம் சமூகத்திற்கு விழிப்புணர்வு செய்தல், முதியோர் இல்லங்கள், முதியோர் பகல் நேர பராமரிப்புகள் மற்றும் கிராமமட்ட பிரதேச மட்ட மாவட்ட மட்ட கிராம குழுக்கள் மூலம் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பன இடம் பெறும்.

இவ்வாறான பல்வேறு வேலை திட்டங்களை முதியோர்களுக்கான தேசிய செயலகமும், அதன் பணிப்பாளர் மற்றும் கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சும்,அதன் செயலாளர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளின் பல்வேறு பங்களிப்புகளுடன் முதியோர்களுக்கான தேசிய நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

# மாகாண ஆட்சி இல்லாத நிலைமை ஒரு ஜனநாயக விரோதமான செயல்

## முன்னாள் வடக்கு, கிழக்கு முதலமைச்சர் வரதராஜபெருமாள் ஆணித்தரம்

(கனகராசா சரவணன்)

இலங்கையின் யாப்பில் 1987 கொண்டுவரப்பட்ட மாகாண சபை ஆட்சி முறையில் எந்தவிதமான திருத்தங்கள் இன்று வரை மேற்கொள்ளப்படவில்லை. எனவே அரசியல் யாப்பிலும் மாகாண சபை சட்டத்தின் ஊடாக அன்று வழங்கப்பட்ட அத்தனை அதிகாரங்களும் முறையாகவும் முழுமையாகவும் நிறைவேற்றப்பட வேண்டும். இது அரசின், ஜனாதிபதியின், அமைச்சரவையின், நாடாளுமன்றத்தின் கடமை. ஆனால் கடந்த 8 வருடங்களாக மாகாண ஆட்சி இல்லாத நிலைமை இருக்கின்றது. இது ஒரு ஜனநாயக விரோதமான செயல் - என முன்னாள் வட கிழக்கு முதலமைச்சர் வரதராஜபெருமாள் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பெய்ஸ் ஒவ் மீடியாவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை அரசியல் யாப்பின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய மாகாண ஆட்சி முறை முழுமையான அதிகாரங்களுடன் முறையாகவும் இந்த நாட்டில் நடைமுறையில் செயல்பட வேண்டும் என்பதை அரசியல் கட்சிகள் அனைத்தினதும், இலங்கையில் வாழ்கின்ற தேசிய சிறுபான்மையினரதும், தென் இலங்கையில் உள்ள முற்போக்கு சக்திகளின் ஒழுங்குபட்ட குரலாகவும் இந்த கோரிக்கை எழவேண்டும் என்ற எண்ணத்தோடு செயற்பாடுகளை கடந்த மாதத்தில் இருந்து ஆரம்பித்துள்ளேன்.

இந்த வகையில் இரண்டு நாள்களாகக் கிழக்கு மாகாணத்தில் உள்ள பல்வேறு தரப்பட்ட சமூக பிரதிநிதிகள், அரசியல் தலைவர்கள், எழுத்தாளர்கள் உட்பட சமூக பிரமுகர்கள் பலரைச் சந்தித்து வருகிறேன்.

இந்த நாட்டில் மாகாண ஆட்சி முறை மிக வலுவானதாகவும் காத்திரமானதும் சுயாதீனமானதாகவும் நடைபெறுவது மிக மிக அவசியமானது. இந்த நாட்டிலுள்ள தேசிய சிறுபான்மை இனங்களுடைய பிரச்சினைகள், அவர்களின் அடிப்படை தேவைகள் கவனிப்பதற்கும் நாட்டில் பிராந்திய ரீதியான அபிவிருத்தி மேற்கொள்வதற்கும் இந்த நாட்டில் அதிகாரங்கள் குவிந்திருக்கும் வகையாக இல்லாமல் ஒரு மத்திய அரசிடமும் ஜனாதிபதியிடம் குவிந்திருக்கும் முறையே இங்கு இருக்கின்றது.

எனவே மாகாணங்களை நோக்கி அந்த அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். அது ஜனாநாயத்தினுடைய கோரிக்கை. அந்த வகையில் மாகாண ஆட்சி முறை முழுமையான அதிகாரத்துடன் செயற்படும் நிலை இன்று உருவாக்கப்பட வேண்டும். இது உண்மையில் அரசின், ஜனாதிபதியின், அமைச்சரவையின், நாடாளுமன்றத்தின் கடமை. ஆனால் இங்கே கடந்த 8 வருடங்களாக மாகாண ஆட்சி இல்லாத நிலைமை இருக்கின்றது. இது ஒரு ஜனநாயக விரோதமான செயல்.

எனவே இப்போதாவது அந்த மாகாண ஆட்சிகளுக்காக மாகாண சபை தேர்தல்கள் உடனடியாக நடாத்தப்பட வேண்டும். அதன் மூலமாக மாகாணங்களில் மக்கள் ஆட்சி நிலைபெற வேண்டும். அதன் மூலம் ஒவ்வொரு மாகாணத்திலும் மக்களின் அடிப்படையில் ஒவ்வொரு விடயங்களும் கவனிக்கப்படும். அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலமே இந்த நாட்டில் இன நல்லிணக்கம் ஏற்படுமே தவிர, ஆட்சியாளர்கள் தாங்கள் இனவாதிகள் அல்லர் என்பதால் அது நடைபெறமாட்டாது.

நடைமுறையில் இன நல்லிணக்கம் ஏற்படுகின்ற வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். அதில் மிக பிரதானமானது மாகாண ஆட்சிகள் முறையாகவும் முழுமையாகவும் இங்கு செயல்பட வேண்டும். எனவே அரசாங்கம் எந்த விதமான காரணங்களையும் கூறாது உடனடியாக மாகாண ஆட்சிக்கான தேர்தல்களை நடத்த வேண்டும். அதற்கு முழுமையான அதிகாரங்களை எப்படி வழங்கப் போகிறார்கள் என திட்டங்களை வெளியிடவேண்டும்.

அது தொடர்பாக அரசியல் கட்சி தலைவர்களுடன் அரசாங்கம் பேச வேண்டும். இவை எல்லாவற்றையும் வெளிக்கொண்டு வருவதற்கு மக்கள் மத்தியில் இருக்கும் - சமூகத்தில் இருக்கும் - எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் இந்த விடயத்தில் அக்கறையும் விழிப்புணர்வும் கொண்டு செயல்பட வேண்டும்.

அந்த அடிப்படையில் அரசியல் கட்சி தலைவர்கள் மட்டுமல்ல, அத்தொடர்பாக முஸ்லிம் தலைவர்களான ஹசன்அலி, அதாவுல்லா ஆகியோரை சந்தித்து இந்த அதிகார பகிர்வுக்கான ஒரு ஜனநாயக இயக்கத்தை எல்லோரும் சேர்ந்து மேற்கொள்ள வேண்டும் எனக் கோரினேன். இந்த குரலை வலுவானதாக வெளிக் கொண்டு வரவேண்டும். இந்த கோரிக்கை அனைத்து மக்களினது கோரிக்கையாகவும் தேசிய சிறுபான்மையினது கோரிக்கையாகவும் வெளிவர வேண்டும் என்ற செயற்பாடுகளில் மேற்கொண்டு வருகிறேன்.

சமஷ்டி மட்டுமல்ல, அதற்கு மேலாக இணைப்பு ஆட்சி எல்லாம் வரலாம். அது எல்லாம் இப்போது சாத்தியம் இல்லை. எனவே அதை கோருகின்ற கட்சிகள் அதை கோரட்டும். ஆனால் இன்று இருக்கின்ற நிலை - இப்போது அரசியல் யாப்பில் இருக்கும் மாகாண ஆட்சி முறையை - முறையாக அதில் உள்ள அதிகாரங்களை முழுமையாகவும் வழங்குவதன் மூலம் காத்திரமான விடயம் ஏற்படும். அந்த விடயங்களை அடிப்படையாக கொண்டு வடக்கு - கிழக்கு மாகாணம், மலையக மக்களின் அடிப்படை பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இருக்கும்.



அதேவேளை எந்த விடயமும் ஒரே பாய்ச்சலில் இடம்பெறுவதில்லை. ஒரு நீண்ட கால வேலைத்திட்டங்கள் ஊடாகவும் நீண்டகால அரசியல் வேலைத்திட்டம் ஊடாகவும் பல்வேறு அரசியல் கட்டமைப்புக ஏற்படும் என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தீவிரமான கோரிக்கைகளை கோருபவர்கள் சிங்களவர் மத்தியிலும் இருக்கின்றனர். தமிழர்கள் மத்தியிலும் இருக்கின்றனர். அதேவேளை இப்போது இருக்கின்ற மாகண ஆட்சி முறையில் பயன் இல்லை என சொல்பவர்கள் ஒரு பக்கம். அதனால் அது வேண்டாம் என்று அவர்கள் சொல்லுகின்றனர்.

அதேபோல் சிங்களவர் மத்தியில் வேண்டாம் என சொல்லுவதற்கு இன்னொரு விதமாக, மாகாண ஆட்சி தேவை இல்லை, அது வெள்ளை யானைகள், அதில் பயன் இல்லை என அவர்கள் ஒரு பக்கம். இவ்வாறு இரண்டு பகுதியினர் மாகாண ஆட்சி முறை தடையாக இருக்கிறார்கள் என்றால் கூட அவர்களது குரல் இந்த நாட்டினுடைய பெரும்பான்மையான குரல் அல்ல என்பதை மிக ஆணித்தரமாகக் கூற விரும்புகிறேன்.

1987 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு திருத்தத்தின் ஊடாகவும் அதனுடன் தொடர்ச்சியாக வந்த மாகாணசபை சட்டத்தின் ஊடாகவும் உருவாக்கப்பட்ட மாகாண சபை ஆட்சி அதிகாரங்கள் நாடாளுமன்றத்திலும் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களாலும் அதற்கு இடையூறு செய்யப்பட்டது. அல்லது மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. ஆனாலும் 13 திருத்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பில் எந்தவிதமான திருத்தங்கள் இன்று வரை மேற்கொள்ளப்படவில்லை.

ஆனபடியால் அந்த அதிகாரப் பரவலாக்கன் அரசியல் யாப்பில் அப்படியே இருக்கின்றன அது தொடர்பாக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் திருத்தம் செய்திருந்தால் அவை தற்காலிகமானவை. அதனால்தான் கூறுகின்றோம். இப்போது இருக்கக்கூடிய ஆட்சியாளர்கள் வேண்டும் என்றால் சில சட்டங்களை உருவாக்கி கொள்ள வேண்டியிருக்கும். அதேவேளை கடந்த காலத்தில் பிழையாக கொண்டுவரப்பட்ட சட்டங்கள் மற்றும் தவறான சுற்றுநிக்கை வழங்கப்பட்டிருந்தன அவைகள் எல்லாம் வாபஸ் பெற வேண்டும். - என அவர் மேலும் தெரிவித்தார்.








# வவுனியா வடக்கு பிரதேச சபையின் செயற்பாடுகளை சுமுகமாக முன்னெடுப்பது தொடர்பில் இணக்கப்பாடு

## எட்டப்பட்டுள்ளது என சத்தியலிங்கம் எம்.பி. தகவல்

(கி.வசந்தன்)

வவுனியா வடக்கு பிரதேச சபை நிர்வாகத்தை முரண்பாடுகளின்றி கொண்டு செல்வது தொடர்பில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா வடக்கு பிரதேச சபை தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

வவுனியா வடக்கு பிரதேச சபையை நிர்வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து கலந்துரையாடி இருந்தோம்.

கடந்த 4 மாதமாக சபையை நடத்தும் போது எதிர்நோக்கும் பட்ட பிரச்சனைகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்துப் பேசப்பட்டது.

இதில் பல விடயங்கள் கட்சிகளினாலும் உறுப்பினர்களினாலும் முன்வைக்கப்பட்டன. அவற்றை ஆராய்ந்து இப்பிரதேச சபையை மக்களுக்கு பயனுள்ள வகையில் எவ்வாறு கொண்டு செல்லலாம் எனக் கலந்துரையாடினோம்.


குறிப்பாக வடக்கில் வவுனியா வடக்கு பிரதேச சபை என்பது எமது மக்களின் இனப்பரம்பலை மாற்றுகின்ற செயற்பாடுகளை கொண்ட பிரதேசங்களை கொண்டது. நாங்கள் தமிழ் மக்களுடைய நன்மை கருதி இதனை சிறப்பாக கொண்டு நடத்துவது தொடர்பாக சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

தவிசாளருக்கு எதிராக ஆளும் கட்சி உறுப்பினர்களே வெளி நடப்பு செய்தமை தொடர்பிலும் பேசப்பட்டது. சுமுகமான நிலை தான் தொடர்ந்து இருக்கிறது. கருத்து வேறுபாடுகள் வருவது இயற்கை. அவ்வாறு எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு நிர்வாகத்தை எவ்வாறு கொண்டு நடத்துவது என தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. – எனத் தெரிவித்தார்.










## சர்வதேச சிறுவர், முதியோர் தினம்

# ஒரே நாளில் கொண்டாடப்படுவது அர்த்தமுள்ள கண்ணோட்டமாகும்

### வாழ்த்துச் செய்தியில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ



'இன்றைய சிறுவர் நாறைய முதியவர்' என்ற சொற்றொடர் சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் பற்றிய நல்ல புரிதலை நமக்கு வழங்குகிறது. சிறுவர்களின் பாதுகாப்பு என்பது சமூகத்தின் நல்வாழ்வாகும். சமூகத்தின் நல்வாழ்வை எதிர் காலத்துக்குப் பரம்பரையாக்கும் முதியவர்கள் என்பவர்கள் ஒரு நாட்டின் முன்னோடி, சிறந்த முன்மாதிரிகளைக் குறியீடாக்கும் குழுவாகும். இந்த இரு குழுக்களையும் பாதுகாத்தல், பராமரித்தல் மற்றும் அவர்களுக்காக சமூகம் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் மற்றும் கடமைகளைச் சரியாக நிறைனவற்றுவது ஒரு நாட்டின் நல்ல நிலையை எதிர்பார்க்கும் அனைவரதும் பொறுப்பாகும்.

சர்வதேச சிறுவர் தினமும் சர்வதேச முதியோர் தின–மும் இன்றாகும். இதனை முன்னிட்டு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

நமது சமூகத்தின் கலாசாரத்தை வளர்க்கும் நான்கு முக்கிய மத போதனைகளில் வழிகாட்டுதல்கள் நமக்குப் பாரம்பரியமாக கிடைத்துள்ளன. இந்த ஒவ்வொரு மத வழிகாட்டுதலிலும், நாம் பழக்கப்படுத்திக் கொண்ட நல்ல நடத்தையைப் பேணுதல்,

சிறுவர் மற்றும் முதியவர் நமது பொறுப்பு என்று நமக்கு காட்டப்பட்டுள்ளது.

அதன்படி, தற்போதைய சமூகத்தில் சிறுவர்கள், எதிர் கொள்ளும் சவால்கள் மற்றும் முதியவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பரிசீலிக்கும் போது, இந்த இரு குழுக்கள் மீதும் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

ஒருபுறம் சிறுவர் துஷ்பிரயோகம், முதியவர்களுக்கு செய்யப்படும் புறக்கணிப்பு தற்போது பெருமளவில் பதிவாகும் பின்ணியில், சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் குறித்துச் சமூகத்தை விழிப்புணர்வு செய்வதற்கான திட்டங்கள் மேலும் பலப்படுத்தப்பட வேண்டும்.

இந்த ஆண்டு சிறுவர் தினத்தின் கருப்பொருள் 'சிறுவர் வர்களின் உரிமைகளுக்காக முன்நிற்போம்' என்பதாகும். சிறுவர்களின் உரிமைகள் குறித்துச் சமீப காலத்தில் நாடாளுமன்றத்திலும் சமூகத்திலும் தீவிரமான கலந்துரையாடல் உருவாகியுள்ளது.

இது குறித்துச் செயற்படும் போது நமக்கு பாரம்பரியமாகக் கலாச்சார அடித்தளம், சாராம்சம் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கடந்த காலத்தில் காட்டப்பட்ட போதனைகளைப் புறக்கணித்துச் செயற்பட முடியாது. எனவ சிறுவர்களின் உரிறமகளுக்காக முன்நிற்கும் போது, நாம் இவை அனைத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

'நமது நல்வாழ்வு மற்றும் நமது உரிமைகள்' என்ற கருப் பொருளுடன் கொண்டாடப்படும் முதியோர் தினத்தில், அந்தக் கருப்பொருளிலான முதியவர்கள் பற்றிய விளக்கம் நமது பொறுப்புகள் பற்றிய நினைவூட்டலும் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் முதியோர் மக்கள் தொகை வேகமாக அதிகரித்து வருகின்றது என்பதைச் சமீபத்திய அறிக்கை ஒன்று காட்டியது. என்னவென்றால் இலங்கையின் மக்கள் தொகையில் நூறு வயதைத் தாண்டிய ஏறக்குறைய ஐநூற்று நாற்பத்து ஏழு பேர் இருக்கின்றனர் என்பதாகும்.

முதியோர் மக்கள் தொகை என்பது சிறந்த கல்வி கற்ற, அனுபவங்கள் நிறைந்த குழுவாகும். அதனால் நமது நாட்டின் சுகாதார சேவை காரணமாக நல்ல சுகாதார நிலையுடன் இருக்கும் குழுவாகவும் உள்ளது.

எனவே முதியோர் மக்கள் தொகையை நாட்டின் வளர்ச்சியில் பயனுள்ள வகையில் இறணத்துக் கொள்வது நமது பொறுப்பாகும். இது நமது நல் வாழ்வுக்காகவும், அவர்களுக்காக நாம் பாதுகாக்க வேண்டிய உரிமையாகவும் உள்ளது. இது குறித்து அரசு சரியாகச் சிந்தித்துச் செயற்படுகிறதா என்பது கேள்விக்குரியது.

சிறுவர்கள் மற்றும் முதியவர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட நாளை ஒரு நாளுக்கு மட்டும் வறரயறுக்காமல், ஆண்டு முழுவதும் நமது கடமை மற்றும் பொறுப்பாகச் செயல்படுத்த வேண்டும்.

இந்த ஆண்டு சிறுவர் தினத்திலும் முதியோர் தினத்திலும் அவர்கைளின் நலனுக்காக நாம் செய்ய வேண்டியவற்றைப் பரந்த உரையாடலுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பது என் நம்பிக்கை.– என்றுள்ளது.




- மு.நிமியா -
(ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# போட்டி மிக்க உலகில் பந்தயக் குதிரைகளாக தொலைக்கப்பட்ட சிறுவர்களின் வாழ்க்கை

உலகெங்கும் உள்ள சிறார்கள், குறிப்பாக இலங்கைச் சிறார்கள், போட்டி மிகுந்த கல்வி மற்றும் சமூகச் சூழலில் வற்புறுத்தித் திணிக்கப்படுவதினால், அவர்கள் தங்கள் இயல்பான, அழகான எளிமை மிக்க குழந்தைப்பருவத்தை இழக்கிறார்கள்.

குழந்தைப்பருவம் என்பது, சுதந்திரமாகக் கற்றுக் கொள்வதற்கும், விளையாட்டு மூலம் சமூகத் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கும், இயற்கையின் அதிசயங்களை அனுபவிப்பதற்கும் உரிய பொற்காலம். ஆனால், இன்று, “வெற்றி” என்ற ஒற்றை இலக்கை நோக்கிச் சிறுவர்கள் பந்தயக் குதிரைகளை போல ஓட்டப்படுகிறார்கள். உலகளாவிய போட்டித்தன்மை, மிகைப்படுத்தப்பட்ட பொருளாதார எதிர்பார்ப்புகள் மற்றும் சமூக அந்தஸ்து ஆகியவை இதற்கு முக்கிய காரணங்கள்.

சுகாதாரத்திற்கான உலக அமைப்பின் (WHO) தரவுகளின்படி, இளம் சிறார்களிடையே பள்ளி அழுத்தம் (School Pressure) அதிவேகமாக அதிகரித்துள்ளதைக் காண முடிகிறது. 44 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வில், 15 வயதுச் சிறுமிகளிடையே கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கினர் (63வீதத்தினர்) பள்ளி வேலையால் அழுத்தத்தை உணர்வதாகத் தெரிவித்துள்ளனர். 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, குடும்ப ஆதரவு குறித்த அறிக்கை 73 வீதத்திலிருந்து 68 வீதமாகக் குறைந்துள்ளது. இந்தத் தரவு, சிறார்கள் சவால்களை எதிர்கொள்ளவும், உணர்ச்சிபூர்வமாக வளரவும், குடும்பத்தின் நிபந்தனையற்ற ஆதரவு குறைகிறது என்பதைக் காட்டுகிறது. பெற்றோரின் கவனமும் நேரமும் இப்போது குழந்தைக்கு நிம்மதியை அளிப்பதை விட, அவர்களைப் போட்டிக்குத் தயார் செய்வதில் செலவிடப்படுகிறது.

இலங்கையின் கல்வி முறைமை உலகளாவிய அழுத்தங்களை விட மிகவும் ஆழமான சமூக நெருக்கடியை உருவாக்குகிறது. இலங்கையில், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை என்பது உயர் சமூக அந்தஸ்துள்ள அல்லது பிரபலமான பாடசாலைகளில் சேருவதற்கான ஒரு நுழைவாயிலாகப் பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக, ஐந்து முதல் பத்துப் வயதுக்குட்பட்ட சிறார்கள் கடுமையான தனிப்பட்ட வகுப்புப் பயிற்சிகளுக்கு (Tuition) தள்ளப்படுகின்றனர்.

ஒரு சிறுவன் அல்லது சிறுமி மணலில் கோட்டை கட்டுவது, நண்பர்களுடன் மரமேறுவது அல்லது ஒரு கதையைச் சுதந்திரமாகப் படைப்பது போன்ற எளிமையான இன்பங்களை இழக்கிறார்கள். மாறாக, அவர்களின் அதிகாலைப் பொழுது முதல் இரவு வரை நேர அட்டவணைகளின் படி பயிற்சி வகுப்புகள், மாதிரித் தேர்வுகள், மற்றும் வீட்டுப் பாடங்களால் நிரம்பி வழிகின்றன.

ஒரு பள்ளிக்குச் சேருவதற்காகப் பெற்றோர் போலியான வசிப்பிடச் சான்றுகளைச் சமர்ப்பிக்கிறார்கள், இதுவே ஒரு ஊழல் நிறைந்த சமூகச் சூழலைச் சிறுவர்களுக்கு எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறு போட்டித் தேர்வுகளால் பள்ளிகள் தரப்படுத்தப்படும்போது, அனைத்துச் சிறார்களுக்கும் சமமான வாய்ப்பு மறுக்கப்படுகிறது.

யுனிசெஃப் (UNICEF) அறிக்கைகள், இந்தத் தேர்வு ஒரு குழந்தையின் முழு எதிர்காலத்தையும் தீர்மானிக்கும் எனப் பல பெற்றோர்கள் நம்புவதால், அவர்கள் சிறார்கள் மீது அளவுக்கு அதிகமான அழுத்தத்தைப் போடுகின்றனர் எனச் சுட்டிக் காட்டுகின்றன. இப்போட்டிச் சூழல் சிறார்களின் உளவியல் ஆரோக்கியத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. விளையாடுவதற்கும், கதை சொல்வதற்கும், நட்புடன் பழகுவதற்கும் வாய்ப்பில்லாத போது, மன அழுத்தம், தனிமை மற்றும் விரக்தி ஆகியவை பெருகுகின்றன.

அண்மைக் காலங்களில் இலங்கைச் சிறார்களிடையே மனநல நெருக்கடி அதிகரித்து வருவது குறித்த தரவுகள் அதிர்ச்சியளிக்கின்றன. இலங்கை மாணவர்களில் ஒட்டுமொத்தமாக 18 வீதம் பேர் மனச்சோர்வின் அறிகுறிகளைக் காட்டியுள்ளனர். இந்த உயரிய மனநலச் சுமை, போட்டி நிறைந்த சூழல், தேர்வுத் தோல்வி பயம், மற்றும் பள்ளியில் திறமைகளை உணர்ந்து கொள்ளத் தவறுவது போன்ற காரணங்களால் ஏற்படுகிறது. போட்டி என்பது நட்புறவைச் சீர்குலைத்து, ஒத்துழைப்பு மற்றும் சகோதரத்துவத்தைப் பாதிக்கிறது என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

இலங்கை, ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் சாசனத்தை (UN Convention on the Rights of the Child - UNCRC)) உறுதிப்படுத்தியுள்ளது. இந்தச் சாசனத்தின்படி, ஒவ்வொரு குழந்தைக்கும் முழு

தொடர்ச்சி▼



# போட்டி மிக்க உலகில் பந்தயக் குதிரைகளாக தொலைக்கப்பட்ட சிறுவர்களின் வாழ்க்கை

தொடர்ச்சி▲

மையாக விளையாடுவதற்கும், ஓய்வெடுப்பதற்கும், பண்பாட்டு வாழ்க்கையில் சுதந்திரமாகப் பங்கேற்பதற்கும் உரிமை உண்டு.

சமீபத்தில் திருத்தப்பட்ட சிறுவர்கள் மற்றும் இளம் ஆள்கள் கட்டளைச் சட்டம் (Children and Young Persons Ordinance - CYPO), 2024 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வந்தது. இது, குழந்தைகளை உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் பாதிக்கும் தண்டனைகளை தடுப்பதன் மூலம், அவர்களின் நலனைப் பாதுகாக்க முயல்கிறது. ஒரு சிறுவனை அதிகப்படியான கல்விச் சுமைகளால் மன அழுத்தத்திற்கு உள்ளாக்குவது அல்லது அவமானப்படுத்துவது, அதன் அடிப்படை உரிமைகளை மீறும் ஒரு வகையான உணர்ச்சி ரீதியான புறக்கணிப்பு (ஞுஅழவழையெட நேபடநஉவ) ஆகக் கருதப்படலாம். சட்டம் குழந்தைகளுக்கு உரிமையை வழங்கினாலும், நடைமுறையில், போட்டி மனப்பான்மை காரணமாகப் பெற்றோரும் ஆசிரியர்களும் அந்த உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கின்றனர்.

“இளமையிற் கல்வி சிலையில் எழுத்து” மற்றும் “தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்” இந்த முதுமொழிகள், கல்வி மற்றும் நல்ல பழக்கவழக்கங்கள் இளம் வயதிலேயே கற்பிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றன. ஆனால், போட்டி மிக்க உலகம், கற்க வேண்டிய உண்மையான விஷயங்களான பரிவு, பொறுமை, இயற்கை மீதான ஆர்வம், மற்றும் உறவுகளின் மதிப்பு ஆகியவற்றைக் கற்றுக்கொடுக்காமல், வெறும் மதிப்பெண்களை மட்டுமே மனதில் பதிய வைக்கிறது. இது மனப்பாடக் கல்வியில் சிறந்து விளங்கும் ஆனால் வாழ்க்கையின் யதார்த்தம் தெரியாத ஒரு தலைமுறையை உருவாக்க வழிவகுக்கும்.

போட்டித் தேர்வுகளின் சுமையால் “தொலைக்கப்பட்ட சிறார்களின் வாழ்க்கை“ ஒரு தேசிய அவலமாக மாறுவதைத் தடுக்க வேண்டும். ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் மீதான சமூக சார்பைக் குறைத்து, அனைத்துப் பள்ளிகளின் தரத்தையும் சமப்படுத்துவது அவசியம். மதிப்பெண்களை மட்டும் அளவுகோலாகக் கொள்ளாமல், திறன் அடிப்படையிலான, மகிழ்ச்சியான கற்றல் (Skill-based, Joyful Learning முறையை அறிமுகப்படுத்த வேண்டும்.

பெற்றோர் தங்கள் கனவுகளைத் தங்கள் பிள்ளைகள் மீது திணிப்பதைத் தவிர்க்க வேண்டும். ஒரு குழந்தை எவ்வளவு பணம் ஈட்டும் என்பதை விட, அது எவ்வளவு மகிழ்ச்சியாக, ஆரோக்கியமாக மற்றும் நல்ல குடிமகனாக வளர்கிறது என்பதே உண்மையான வெற்றி என்பதை உணர வேண்டும்.

பள்ளிகள் மற்றும் வீடுகளில் விளையாட்டுக்கும், ஓய்வுக்கும், படைப்பாற்றல் செயல்பாடுகளுக்கும் அதிக நேரம் வழங்கப்பட வேண்டும். “விளையாட்டு என்பது சீரிய கற்றலில் இருந்து விடுதலை அல்ல் அதுவே குழந்தைகளுக்கு சீரிய கற்றலாகும்“ என்ற கூற்று இதை வலியுறுத்துகிறது.

வெற்றி – தோல்வி என்ற பாதகமான முரண்பாட்டு தீர்வை சிறார்களுக்கு பழகிவிடக்கூடாது. வெற்றி – வெற்றி எனும் நேர்மறையான தீர்வு வழியினை சிறார்களுக்கு பழக்குதல் அவசியம். வகுப்பிலுள்ள மாணவர்களில் முதலாம் நிலை ஒரு பிள்ளைக்கும் முப்பதாம் நிலை இன்னொரு பிள்ளைக்கும் வழங்குவது ஒரு மிகப்பெரிய போட்டி நிறைந்த சூழலின் வெளிப்பாடு. இதுவே பொறாமை மற்றும் வேற்றுமையான மனநிலையை சிறுவர்கள் மத்தியில் வளர்த்தெடுக்கிறது. ஒவ்வொரு தனி சிறாரும் தனித்தனித் திறமைகள் உடையவர். அவர்களின் திறமைகளை பாடத்திட்டங்களுக்குள் வரையறுத்தல் ஆகாது. அவர்களின் தனிப்பட்ட திறமைகளை கண்டறிந்து வளர்தெடுக்க கல்வி சீர்திருத்தங்களின் ஊடாக வலியுறுத்துதல் இன்றைய காலத்தின் கட்டாயமாக உள்ளது.

சிறுவர் தினமான இன்று, நாம் ஒவ்வொருவரும், கெட்டபழக்கங்களைப் பின்பற்றுவதை விட, நல்ல விஷயங்களைப் பின்பற்றக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். நம்முடைய சமூகமும் பெற்றோரும் உருவாக்கிய அதிகப்படியான அழுத்தத்தால் தங்கள் எளிமையான, அழகான வாழ்க்கையை இழந்த சிறார்களின் குழந்தைப்பருவத்தை மீட்டு, அன்பையும் ஆதரவையும் அவர்களுக்கு வழங்குவதே நமது முதன்மை கடமையாகும்.



# சிறுவர் தினம் – ஒரு நாளா? இல்லை பொறுப்பின் ஆரம்பமா?

ஒரு புன்னகை, ஒரு கேள்வி, ஒரு கனவு இவையெல்லாம் சிறுவர்களின் உலகத்தை நிரப்பும் அழகான கூறுகள். ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 1 ஆம் திகதி சிறுவர் தினம் எனக் கொண்டாடப்படும் இந்த நாள் இனிய வாழ்த்துக்களோடு ஆரம்பமாகிறது.



- மதுஷாயினி மதிவதனன் -
(ஊடக கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

பள்ளிகளில் விழாக்கள், பரிசுகள், பாடல்கள், போட்டிகள் இவையனைத்தும் குழந்தைகளை மகிழ்விப்பதற்கேயாகும்.

ஆனால், ஒரு நாளே போதுமா? சிறுவர் தினம் ஒரு நாளா? அல்லது ஒரு பொறுப்பின் ஆரம்பமா? இது தான் நம்மை சிந்திக்க வைக்கும் உண்மையாகும்.

இந்த நாளின் நோக்கம் ஒரு குழந்தையின் உரிமைகள், பாதுகாப்பு, வளர்ச்சி, நலம் ஆகியவற்றைப் பற்றி நம்மை விழிப்பூட்டுவதாக இருக்க வேண்டும்.

இன்றைய உலகில் சிறுவர்கள் பலவித சவால்களை எதிர்கொள்கின்றனர். கல்வியிலிருந்து எதிர்காலம் வரை அவர்களின் வாழ்வை மாற்றும் பொறுப்பு நம் தோள்களில் உள்ளது. அதனால்தான் இந்த சிறுவர் தினம் விழா அல்ல, விழிப்புணர்வு. வெறும் நாள் அல்ல, நம் பொறுப்பு தொடங்கும் தருணமாகும். இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர் என்பது ஓர் அழகான வாசகம். ஆனால் அவர்களை பாதுகாக்கும் பொறுப்பு யாருடையது? இந்த நாளில் நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய வழிகாட்டும் நோக்கமும் நீடித்த முயற்சியும் தான் ஒரு சமூகத்தின் வளர்ச்சி பாதையை நிர்ணயிக்கும்.

## இலங்கையில் சிறுவர்களின் தற்போதைய நிலை

இலங்கையில் இன்று பல சிறுவர்கள் போதிய கல்வியின்றி, ஏழ்மை, போரின் தாக்கம், பாலியல் மற்றும் உளவியல் வன்முறை, ஆகியவற்றில் சிக்கியுள்ளனர். தொழில்நுட்ப வளர்ச்சியுடன் கூட சிலர் சமூக வலைத்தளங்களில் தவறாக பயன்படுகின்ற சூழலும் உள்ளது. இது அவர்களின் பரிணாம வளர்ச்சிக்கு இடையூறு ஏற்படுத்துகிறது.

தொழிநுட்ப வளர்ச்சியை நோக்கும் போது 2017 ஆம் ஆண்டிலிருந்து சிறுவரிடையே இணையத்துடனான தொடர்பு வேகமாக அதிகரித்துள்ளது. UNICEF நிறுவனத்தின் அறிக்கையின்படி 11 வயது தொடங்கி 18 வரையிலான சிறுவர்களில் 35 சதவீதமானவர்கள் இணையத்தை உபயோகிக்கின்றனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கேற்ப இலங்கையில் சிறுவர் நேரலைத் துஷ்பிரயோகத்திற்கு

தொடர்ச்சி▼

# சிறுவர் தினம் – ஒரு நாளா? இல்லை பொறுப்பின் ஆரம்பமா?

தொடர்ச்சி▲

எதிராகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் சர்வதேச வழக்குகளுக்கு நிகராக அதிகரித்துக் காணப்படுவதுடன் இலங்கையில் 2017 ஆம் ஆண்டு இணையத்தோடு தொடர்பான 92 வழக்குகள் பதியப்பட்டுள் ளன (NCPA புள்ளிவிவரம்). இலங்கையில் கட்டாயக் கல்வி அரசால் உறுதி செய்யப்பட்டிருந்தாலும், சில பின்தங்கிய பிரதேசங்களில் (மலையகம்,வடக்கு, கிழக்கு) உள்ள சிறுவர்கள் இன்னும் போதிய கல்வி வசதிகள் இல்லாமல் இருக்கின்றனர். பாடசாலை வசதிகள் குறைவு, போக்குவரத்து சிக்கல்கள், பொருளாதார தட்டுப்பாடுகள் காரணமாக பள்ளிக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. சிறுவர் துஷ்பிரயோகங்கள், பாலியல் வன்முறைகள், வீட்டு வன்முறைகளில் சிறுவர்கள் பாதிக்கப்படுவதும் அதிகரித்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளில், குழந்தைகளில் மனஅழுத்தம், பயம், எதிர்பார்ப்பு குறைவு போன்ற பிரச்சனைகள் அதிகரித்து வருகின்றன. குடும்பக் கலகம், பொருளாதார பின்னடைவுகள், சமூக வன்முறைகள் இதற்குக் காரணங்களாகும். இந்த நிலைமைகள் மூலம் சிறுவர் தினம் ஒரு விழாவாக அல்ல ஒரு பொறுப்பை உணர்த்தும் நாளாக மாற றப்பட வேண்டிய அவசியம் தெளிவாகிறது.

### சிறுவர்களை நாம் ஏன் பாதுகாக்க வேண்டும்?

சிறுவர்கள் உடல்,உளத் துஷ்பிரயோகம் காரணமாக மது, போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபடுதல், கடத்தப்படுதல் இளவயதுக் கர்ப்பம், தற்கொலை போன்றவற்றிற்கு உள்ளாக்கப்படலாம். இத்தகைய பயங்கரமான நிலைமைகள் சிறுவர்களின் நல்வாழ்விற்கு மட்டுமல்லாமல் நாட்டின் எதிர்காலத்திற்கும் நீண்டகால அச்சுறுத்தலாக தொடரும். இது நேரலையிலும் நேரலையில் இணையாத நிலையிலும் சிறுவர் பாலியல் சுரண்டலால் ஏற்படும் பாதிப்பும் பெரும் பங்கு வகிக்கின்றது. ஆகவே அவர்களைப் பாதுகாக்க வேண்டியது நமது அனைவரினதும் பொறுப்புவாய்ந்த கடமையாகும்

இன்றைய சமூகத்தில் சிறுவர் பாதுகாப்பு என்பது தீவிர கவலையை ஏற்படுத்தும் ஒரு விடயமாகவே உருவெடுத்துள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சி, தகவல் பரவல், சமூக ஊடகங்களின் ஆதிக்கம் ஆகியவை சிறுவர்களின் சூழலை பலவீனப்படுத்தியுள்ளன. இந்நிலையில் அவர்களை பாதுகாக்கும் பொறுப்பு யாருடையது என்பதே முக்கியக் கேள்வியாகின்றது.

சிறுவர்கள் யாருடைய பிள்ளைகளாக இருந்தாலும் அவர்கள் சமூகத்தின் சொத்து. அவர்கள் நலன் நம்முடைய சமூகவளர்ச்சி, நாட்டின் வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையாகும். அவர்களது உளவளர்ச்சி, உடல் பாதுகாப்பு, கல்வி, உணர்வு நிலைகள் அனைத்தும் ஒரு நாட்டு சமூகத்தின் பொறுப்பாகவே பார்க்கப்பட வேண்டும். சிறுவர்கள் குடும்பத்தில் மட்டும் வாழ்வதில்லை. தெருவிலும் பள்ளியிலும், சமூக இடங்களிலும் அதிக நேரம் செலவிடுகின்றனர். அவர்களைப் பாதிக்கக்கூடிய சூழ்நிலைகள் அவர்களின் வெளி உலகத்தில் அதிகம் காணப்படுகின்றன. எனவே, அருகில் காணும் சக மனிதர்களாக நமக்கும் பாதுகாப்பு உறுதி செய்ய வேண்டிய கடமைகள் உள்ளன. சிறுவர் பாதுகாப்பு என்பது அரசு மட்டுமல்ல, ஒவ்வொருவரின் செயலாற்றலால் நிர்ணயிக்கப்படவேண்டிய ஒரு நெறிப்படுத்தப்பட்ட பொறுப்பாகும். நாம் கண் மூடி இருந்தால் ஒரு நாளில் அந்த குழந்தையின் அழுகை நம்மை அடையலாம். இன்று ஒரு குழந்தையை பாதுகாப்பது ஒரு தேசத்தின் எதிர்காலத்தை பாதுகாப்பதற்குச் சமம் என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

### யாரிடம் முறையிடுவது?

நீங்கள் நேரலை ஊடான சுரண்டல் அல்லது துஷ்பிரயோகத்தை எதிர்கொண்டால் நம்பிக்கையுடன் சட்ட நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யுங்கள். புகார் ஒன்றில் ஆரம்பத் தகவலை வழங்குபவரின் அடையாளத்தை வெளிக்காட்டாமல் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். நீங்கள் உதவி பெறவேண்டிய உள்நாட்டு அமைப்புக்கள் சிலவற்றைக் கீழே காணலாம்.

சிறுவர் மற்றும் மகளிர்களுக்கு எதிரான துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கான பிரிவு

உங்களுக்கு மிக அருகில் இருக்கும் காவல் நிலையத்தில் காணப்படும் சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் இழைக்கப்படும் வன்முறை, துஷ்பிரயோகம், சுரண்டல் போன்ற சம்பவங்களை பற்றி முறைப்பாடு செய்யக்கூடிய காவல் நிலையப் பிரிவாகும். இதற்கான முதற்கட்ட தொடர்பு தளமாக காவல் நிலையத்தைப் பயன்படுத்தலாம்.

### தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை (NCPA)

18 வயதிற்குக் குறைந்த ஒருவர் வன்முறை அல்லது துஷ்பிரயோகத்திற்கு உள்ளானால், 1929 இலவச தொலைபேசி இலக்கம் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு (NCPA) முறைப்பாடு செய்யலாம்.

குற்றவியல் புலனாய்வு திணைக்களத்திலுள்ள (CID யின்) சைபர் குற்றவியல் பிரிவை நேரடியாக அணுகலாம். அத்துடன் 011-232 6979 என்ற தொலைபேசி எண் மூலமும் முறைப்பாடு செய்யலாம். மற்றும் சம்பவம் பற்றிய விவ்சரங்களை dir.cid@police.lk மற்றும் telligp@police.lk என்ற மின்னஞ்சல் மூலமாகவும் அறிவிக்க முடியும்.




அந்த வகையில் சிறுவர் தினம் ஒரு கொண்டாட்ட நாளாக மட்டுமல்ல, பொறுப்பும் பாசமும் நிரம்பிய விழிப்புணர்வு நாளாக மாறவேண்டும். ஒரு நாட்டின் எதிர்காலம் அதன் சிறுவர்களின் நலனில் உருவாகிறது. இன்று நாம் அவர்களுக்கு பாதுகாப்பும், கல்வியும், உரிமையும் வழங்கத் தவறுகிறோமா? – என சுய விசாரணை செய்ய வேண்டிய தருணமிது.

இலங்கையின் சமூக அமைப்புகள், கல்வி நிலையங்கள், ஊடகங்கள், அரசாங்கம் மற்றும் பெற்றோர்கள் என அனைவரும் சேர்ந்து சிறுவர்கள் வளர்வதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். ஆகவே சிறுவர் தினம் ஒரு நாளல்ல, அவர்களின் உரிமைகளை நினைவுகூர்ய்ம் நம் பொறுப்பின் தொடக்கம் என்பதை உணர்த்தும் நாள் ஆகும் என்பதை நாம் அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும்.



- செ.அனுத்திரா -
(ஊடக கற்கைகள் துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

# மழலைகளுக்கான நாள் இன்று

“ஓடி விளையாடு பாப்பா – நீ ஓய்ந்திருக்க
லாகாது பாப்பா.
கூடி விளையாடு பாப்பா – ஒரு குழந்தையை
வையாதே பாப்பா
சின்னஞ் சிறுகுருவி போலே – நீ திரிந்து
பறந்து வாபாப்பா.
வண்ணப் பறவைகளைக் கண்டு – நீ மனதில்
மகிழ்ச்சி கொள்ளு பாப்பா........”

– என சுப்பிரமணியபாரதியாரின் பாடலுக்கு ஏற்ப சிறுவர்களை வாழவழிகாட்ட கடமைப்பட்டுள்ளனர் பெற்றோர்.

உலகளாவிய ரீதியில் சிறுவர் தினம் இன்று ஒக்டோபர் 01 கொண்டாடப்படுகிறது. இவ் வருட சிறுவர் தினத்தின் கருப்பொருளாக “அன்பால் பாதுகாப்போம் – உலகை வெல்வோம்” அமைகின்றது.

### அன்பால் பாதுகாப்போம்

சிறுவர்களுக்கு அனைத்து வகையான வன்முறைகள், சுரண்டல்கள் மற்றும் புறக்கணிப்புகளிலிருந்து முழுமையான பாதுகாப்பு, ஊட்டச்சத்து மற்றும் அன்பு கிடைப்பதை உறுதி செய்வதாக அமைதல் வேண்டும்.

### உலகை வெல்வோம்

சிறுவர்களுக்குக் கல்வி, தைரியம் மற்றும் அதிகாரம் அளிப்பதன் மூலம், அவர்கள் எதிர்காலத்தில் உலக அளவில் வெற்றிகரமாகச் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துதல்.

சிறுவர்கள் என்பவர்கள் எதிர்காலத்தின் தூண்கள். சிறுவர்கள் தொடர்பான விழிப்புணர்வை அனைவருக்கும் வழங்கும் முகமாக இன்று ஒக்டோபர் முதலாம் திகதி சிறுவர் தினம் கொண்டாடப்படுகின்றது. இலங்கை சட்டத்தின் படி 18 வயதுக்கு கீழ் உள்ளவர்கள் சிறுவர்கள் என்ற வரையறைக்குள் உள்ளடங்குகின்றனர்.

“ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?”– என்ற பழமொழிக்கு இணங்க சிறு வயதில் கேட்கின்ற விடயங்கள், பின்பற்றுகின்ற ஒழுக்கங்கள் ஒரு மனிதன் எதிர்காலத்தில் எவ்வாறு உருவாகுவான் என்பதை தீர்மானிப்பதாக அமைகின்றன.

சிறுவர்கள் முளை போன்றவர்கள். எவ்வாறான சூழ்நிலையில் அவர்கள் முளைக்கின்றார்களோ அச்சூழ்நிலைக்கு ஏற்றவாறு மரங்களாக மாறுகின்றனர்.

சிறுவர்கள் ஒழுக்கத்துடன் வாழ்வதற்கும் சிறந்த கல்வியை பெறுவதற்கும் உதவுவது அவர்களது பாடசாலை ஆகும். பாடசாலை சிறுவர்களை சமூகமயமாதலுக்கு உட்படுத்துகின்றது. பாடசாலையில் புரட்டாதி மாதம் பிறந்தால் நவராத்திரி விழா கொண்டாட்டம் பாடசாலையே மங்களகரமாக ஜொலிக்கும் அதனோடு சேர்த்து சிறுவர் தின கொண்டாட்டம் என்றால் கூறவா வேண்டும்? பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர் போன்றவர்கள் இணைந்து மாணவர்களுக்கான சிறுவர் தினத்தை ஒழுங்குபடுத்தி மாணவர்களை மகிழ்விக்கின்றனர். மாணவர்களுக்கு இனிப்பு பண்டங்கள், மதிய உணவு போன்றவற்றையும் வழங்கி அவர்களுக்கான விளையாட்டு போட்டிகளை நடாத்தி சிறுவர்களை அன்றைய நாள் முழுவதும் மகிழ்ச்சிகரமாக பார்த்துக் கொள்கின்றனர் ஆசிரியர்கள்.

இது மட்டுமின்றி சில நிறுவனங்கள் சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர்களுக்கான புத்தகங்கள், கொப்பிகளை வழங்குவது, அவர்களுக்கான கலை நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துவது, இனிப்புகளை வழங்குவது போன்றவற்றை செய்கின்றன.

வீடுகளில் வழமை போல் அல்லாமல் அன்றைய தினம் அவர்களுக்கான சிறப்பான கவனிப்பை பெற்றோர்கள் வழங்குகின்றனர். சிறுவர்களுக்காக கொண்டாடப்படுகின்ற இந்நன்னாளில் அவர்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வதோடு அவர்களுக்கான ஒழுக்கம் , பழக்கவழக்கங்கள் அவர்களுக்கான உரிமைகளை எடுத்துக் கூறி அவர்களை விழிப்படைய செய்வதோடு சிறுவர்கள் சார்ந்த விழிப்புணர்வை பெற்றோர்கள், ஆசிரியர்கள் சமூகத்துக்கு ஏற்படுத்துவதாகவும் அமைய வேண்டும்.

சமூகத்தில் சிறுவர்களுக்கு கல்வி இலவசமாக கொடுக்கப்பட்டாலும் தமது வீட்டு சூழ்நிலை காரணமாக கல்வியை புறந்தள்ளி இருக்கும் சிறுவர்கள், அவர்களது எதிர்காலம் கேள்விக்கு உள்ளாக்கப்படுகின்றது. அவர்கள் பெற்றோர்களாக மாறுகின்றபோது அவர்கள் செய்த தவறுகளை எண்ணி வருத்தப்படுகின்றனர். சிறுபராயம் என்பது இலகுவாக புரிந்து கொண்டு நடக்கும் பருவம் அல்ல. நன்மை, தீமைகளை பிரித்து அறிந்து கொள்ள மாட்டார்கள். எவர் எதைக் கூறினாலும் நம்பிக் கொள்வார்கள். அதிலும் அதிகமாக சிறுமிகள் பெற்றோர்களால் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். நாட்டில் நடக்கும் வன்கொடுமைகள், பாலியல் துஷ்பிரயோகங்களில் அதிகமாக பெண் குழந்தைகளே

தொடர்ச்சி▼

# மழலைகளுக்கான நாள் இன்று

தொடர்ச்சி▲

பாதிப்படைந்துள்ளனர்.

ஆண் பிள்ளையோ, பெண் பிள்ளையோ பெற்றோர்களது கைகளிலே அவர்களின் பாதை அமைகின்றது. சிறுவயதில் இருந்தே ஆண், பெண் என்ற பாகுபாடு இல்லாமல் சமத்துவத்தையும், பொறுப்புகளையும், கடமைகளையும் கூறி வளர்க்க வேண்டும்.

இன்று நமது சிறுவர்கள் எதிர்கொள்ளும் மிகப் பெரிய சவால், இணையப் பாதுகாப்பு ஆகும். வகுப்பறையில் இருந்தும், விளையாட்டுக் களத்தில் இருந்தும் அவர்கள் ஸ்மார்ட்போன் மற்றும் சமூக வலைத்தளங்களுக்குள் சென்று விடுகின்றனர். டிஜிட்டல் உலகிலும் சிறுவர்களைத் தவறான தகவல்கள், இணையத் துன்புறுத்தல்கள் (Cyber Bullying) மற்றும் ஆபத்தான தொடர்புகளிலிருந்து பாதுகாக்க வேண்டிய கடமை பெற்றோருக்கும், தொழில்நுட்ப நிறுவனங்களுக்கும், அரசாங்கத்திற்கும் உள்ளது. அன்பால் பாதுகாப்போம் என்றால், உடல்ரீதியான பாதுகாப்பை மட்டுமின்றி, அவர்களின் மன ஆரோக்கியத்தையும் (Mental Health), இணையப் பாதுகாப்பையும் உறுதி செய்வதாகும்.

"நல்லதொரு சமூகத்தை உருவாக்க நல்ல விதைகளை நாட்ட வேண்டும்."

# அபிவிருத்தியின் பெயரில் இனஅழிப்பு தொடர்கின்றது மன்னார் காற்றாலை விவகாரம் அதற்கோர் உதாரணம்

## அருட்தந்தை சத்திவேல் காட்டமான அறிக்கை



(பா.சதீசன்)

இன அழிப்பை அபிவிருத்தியின் போர்வையிலும் தொடரலாம் என்பதற்கு மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டம் நிகழ்கால உதாரணமாகும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் நேற்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மன்னார் காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும், அதன் தலைவர் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவும் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் மிதித்து மக்களை அவமதித்துள்ளனர். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைதிப் போராட்டம் நடத்திய மக்களை பொலிஸார் அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அவமானப்படுத்தி, அவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டமை அரசாங்கத்தின் அடவாடிக் கோர முகத்தை காட்டுகின்றது. அத்தோடு இது, தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளையும் தமிழர்களோடு செய்து கொண்ட ஒப்பந்தங்களைசிங்கள-பௌத்தபேரினவாத அரசியல்வாதிகள் கடந்த காலங்களில் கிழித்து எறிந்தமைக்கு ஒப்பான செயலுமாகும். இதனை வன்மையாக கண்டிக்கின்றோம்.

மக்களுக்கான ஆட்சி தொடர்பில், சர்வதேச மன்றிலிருந்து உலகத்துக்கே பாடம் எடுக்கும் இலங்கை ஜனாதிபதி, தனது சொந்த நாட்டில் தமது தேர்தல் பிரசார மேடைகளில் "மக்களின் விருப்பின்றி எந்த அபிவிருத்தி திட்டங்களையும் மேற்கொள்ள மாட்டேன்" என்று கூறியதை நிறைவேற்றாது, அராஜகம் புரிவதை தமிழர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஏனெனில் இது இன அழிப்பின் இன்னுமொரு வடிவமாகும்.

இன அழிப்பினை அபிவிருத்தியின் போர்வையிலும் தொடரலாம் என்பதற்கு மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டம் நிகழ்கால உதாரணமாகும். மக்களை அவர்களின் வாழ் நிலங்களில் இருந்தும், தொழில்களில் இருந்தும் அகற்றி, அந்நிலத்தினை அவர்களிடமிருந்து பறித்து, முதலாளித்துவ சக்திகளுக்குத் தாரை வார்ப்பது எந்த வகையில் நியாயம்? இதுவா இடதுசாரி கொள்கை? இதற்காகவா தமிழ் மக்களும் தேசிய சக்திக்கும் ஜனாதிபதிக்கும் வாக்களித்து அதிகார பதவியில் அமர்த்தினார்கள்?

அன்று யுத்தகாலத்தில் தமிழர் தேசத்தின் வளமான இல்மனைட் சுரண்டப்பட்டு கப்பலில் ஏற்றி சென்ற போது தமிழர்களின்படைப்புலமும்ஆயுதமும்அதனை தடுத்து நிறுத்தியமை வரலாறு. யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் கனிய வளம் மட்டும் அல்ல, தமிழர்கள் நிலத்தை அபிவிருத்தினனும்போர்வையில்அந்நிய சக்திகளுக்கு கொடுக்க முனைவதும், அதற்கு அமைதி வழியில் எதிர்ப்பு தெரிவிக்கும் மக்களைத் தாக்குவதும் மீண்டும் பழைய நிலையை தோற்றுவிக்கவா என்று கேட்கத் தோன்றுகின்றது.

தமிழர்கள் முன் வைக்கும் யுத்தக் குற்றங்களுக்கான நீதிக்கு அப்பால், அரச பயங்கரவாதப் படையினர் பலவந்தமாக கட்டிய விகாரைக்கு இதுவரை நீதி கிட்டவில்லை. கிழக்கின் மயிலத்தமடு, மாதவனை பண்ணை பணியாளர்களின் போராட்டத்திற்கு நீதி கிடைக்கவில்லை. மன்னார் காற்றாலை மற்றும் கனியவளம் அகழ்வு தொடர்பில் உறுதியளித்த நீதியை மறுப்பதும், தமிழர்களுக்கு எதிரான அழிப்பே. தற்போதைய ஆட்சியாளர்களும் கடந்த காலத்தவர்களைப் போன்று சிங்கள பௌத்த பேரினவாத மனநிலையிலேயே ஆட்சியைத் தொடர்கின்றனர் என்பதனை அண்மைய சம்பவங்கள் உறுதி செய்கின்றன.

தற்போது தமிழர்கள் முகம் கொடுக்கும் சவால்களை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள நினைக்கும் தெற்கின் முற்போக்கு அரசியல் முகம் கொண்ட அரசியல் கட்சி ஒன்று தமிழர்களின் அரசியலை ஆக்கிரமிக்க தமிழர் தாயகத்தில் களம் இறங்கி உள்ளது. தீர்வுக்குப் பக்க பலமாக இருப்பதாகவும், அதற்கான போராட்டங்களை தலைமை தாங்கி முன்னெடுப்பதாகவும் காட்டி நிற்பது தமது கட்சி அரசியலை தமிழர் தாயகத்தில் பலப்படுத்தவே. மீண்டும் ஒரு முறை விட்டில் பூச்சிகளாகி எம்மை நாமே அழித்துக் கொள்ளக் கூடாது என அவசர வேண்டுகோள் விடுக்கின்றோம். தமிழ் அரசியல் தலைமைத்துவங்களும்,சிவில் சமூக அமைப்புகளும், அரசியல் வழிகாட்டிகளாக தம்மை அடையாளப்படுத்தி கட்டுரை வரைபவர்களும் விழித்துக் கொள்ள வேண்டிய காலம் இது.

தமிழர் பாதுகாப்புக்கான கோரிக்கைகளை முன் வைத்து 38 ஆண்டுகளுக்கு முன் தியாகியான திலீபனுக்கு சுடர் ஏற்றிய நாளின் இரவில்தான் மன்னார் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதனை சாதாரண ஒரு நிகழ்வாகவோ, மன்னார் போராட்டக்காரர்கள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதலாகவோ கணிக்க முடியாது. என்றும் உயிர்ப்புடன் உள்ள திலீபனின் அரசியல் கோரிக்கைகளுக்கு எதிரான தாக்குதலாகவே நாம் கொள்ளல் வேண்டும்.

தமிழர்களின் தீர்க்கப்படாத அரசியல் பிரச்சுனையை சர்வதேச மட்டத்தில் நீர்த்துப்போக செய்யவும், தமிழர் தாயகத்தில் நிகழ்ந்த சர்வதேசப் போர்க் குற்றங்களுக்கான நீதியை உள் நாட்டு விசாரணை பொறிமுறைக்குள் முடக்கவும் சிங்கள - பௌத்தத்தின் நீதியை திணிக்கவும் ஆட்சியாளர்கள் மிகத் தீவிரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இதனை அரசியல் மயப்படுத்தப்பட்ட மக்களின் பலத்துடன்தான் முறியடிக்க முடியும். இனியும் காலம் தாமதிக்க முடியாது.

ஆதலால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், திலீபன் உயிர் கொடையான நாள், மாவீரர் நாள் என்பவற்றையும் தமிழர்களின் அரசியலுக்காக வித்தானோரையும் மையப்படுத்திய அரசியல் செயற்பாடு நிறைந்த வழித்தடமாக்கி தமிழர் தாயகத்தின் விடுதலைக்காக செயல்படும் அனைத்தும் தரப்பினரும் தமிழர் தாயக அரசியலுக்காக உயிர் கொடையானவர்களின் அரசியலோடு பயணிக்க திடசங்கற்பம் கொள்ள வேண்டுமென வேண்டுகோள் விடுகின்றோம். - என்றுள்ளது.

# அனுமதித்த இடத்தில் நின்று பேசியதை தவிர நாங்கள் எந்தவித தவறையும் செய்யவில்லை

## த.வெ.க. தலைவர் நடிகர் விஜய் தெரிவிப்பு



"அனுமதிக்கப்பட்ட இடத்தில் நின்று பேசியதை தவிர நாங்கள் எந்தத் தவறும் செய்யவில்லை. பாதிக்கப்பட்டவர்களை விரைவில் சந்திக்க வருகிறேன்."

- இவ்வாறு காணொலி மூலமாக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் நடிகர் விஜய் தெரிவித்துள்ளார்.

கரூர், வேலுச்சாமி புரத்தில் கடந்த 27 ஆம் திகதி த.வெ.க. தலைவர் விஜய் மக்கள் சந்திப்பு பரப்புரைக்கு வருகை தந்தார். அப்போது கூட்ட நெரிசலில் சிக்கி 100 இற்கும் மேற்பட்டோர் மூச்சுத் திணறல் ஏற்பட்டு மயங்கி விழுந்தார். அவர்களை மீட்டு அரசு மற்றும் தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர்.

இதில் பலர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில் தற்போது வரை 41 நபர்கள் உயிரிழந்துள்ளனர். சம்பவத்தில் 18 பெண்கள், 13 ஆண்கள், 5 ஆண் குழந்தைகள், ஐந்து பெண் குழந்தைகள் என மொத்தம் 41 நபர்கள் உயிரிழந்துள்ளனர். 110 நபர்கள் சிகிச்சை பெற்று வந்த நிலையில், 51 நபர்கள் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். மேலும் 60 நபர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சூழலில் இதுதொடர்பாக, தமிழக வெற்றிக் கழகத்தின் கரூர் மாவட்டச் செயலாளர் மதியழகன், பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் உள்பட த.வெ.க. நிர்வாகிகள் மீது பொலிஸ் வழக்குப் பதிவு செய்துள்ளது. ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையிலான விசாரணை ஆணையமும் விசாரணையை தொடங்கியுள்ளது. பரப்புரைக் கூட்டம் நடைபெற்ற இடம், கரூர் அரசு மருத்துவமனை, உயிரிழந்தவர்களின் வீடுகள் ஆகியவற்றுக்குச் சென்று அருணா ஜெகதீசன் விசாரணை நடத்தியுள்ளார்.

அதேநேரத்தில், சி.பி.ஐ அல்லது சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை கோரி சென்னை நீதிமன்றத்திலா த.வெ.க.தரப்பில்முறையிடப்பட்டுள்ளது. விஜய் பிரசாரம் செய்ய தடை விதிக்கு மாறு கோரியும் ஒரு தரப்பு நீதிமன்றத்தை நாடியுள்ளது.

இந்நிலையில் கரூர் துயர சம்பவம் தொடர்பாக நடிகர் விஜய் காணொலி ஒன்றை நேற்று மாலை வெளியிட்டு உள்ளார். அந்த காணொலியில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"என் வாழ்க்கையில் இதுபோன்ற வேதனையான சூழ்நிலையை நான் சந்தித்தது கிடையாது. மனது முழுக்க வலி.வலி மட்டும் தான். இந்த சுற்றுப் பயணத்தில் மக்கள் பார்க்க வருகிறார்கள். அதற்கு ஒரே காரணம் அவர்கள் என் மீது வைத்துள்ள அன்பும், பாசமும் தான் . அந்த அன்புக்கும், பாசத்துக்கும் நான் எப்போதும் கடமைப்பட்டு உள்ளேன். அதனால் தான் இந்த சுற்றுப் பயணத்தில் மற்ற எல்லா விஷயங்களையும் தாண்டி, மக்களின் பாதுகாப்பில் எந்த சமரசமம் செய்யக்கூடாது என்ற எண்ணம் தான் என் மனதில் ஆழமாக இருக்கும். அதனால், அரசியல் காரணங்களை அனைத்தையும் தவிர்த்துவிட்டு, ஒதுக்கிவைத்துவிட்டு. மக்களின் பாதுகாப்பை மட்டும் மனதில் வைத்து அதற்கான இடங்களை தேர்வு செய்வது, அதற்கான இடங்களை அனுமதி கேட்பது, பொலிஸாரிடம் கேட்போம்.ஆனால் நடக்கக்கூடாதது நடந்துவிட்டது.

நானும் மனிதன் தான். அந்த நேரத்தில் அத்தனை பேர் பாதிக்கப்பட்டுட்டு இருக்கும் போது எப்படி அந்த ஊரை விட்டுவிட்டு கிளம்பி வர முடியும். நான் திரும்ப அங்கு சென்று இருந்தால், அதை ஒரு காரணம் காட்டி, வேறு விஷயும்,பதற்றமான சூழ்நிலை, வேறு சில விஷயங்கள், அசம்பாவிதம் நடந்துவிடக்கூடாது என்பதற்காக தான் தவிர்த்தேன்.

இந்த நேரத்தில் சொந்தங்களை இழந்து தவிக்கிற அனைத்து குடும்பங்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு தெரியும். என்ன சொன்னாலும், இது ஈடே ஆகாது என எனக்கு தெரியும். மருத்துவமனையில் சிகிச்சை பெறும் அனைவரும் குணமடைந்து வர வேண்டும் என வேண்டிக்கொள்கிறேன்.

விரைவில் அனைவரையும் சந்திக்கிறேன்.இந்த நேரத்தில் எங்களின் வலிகளை எங்களின் நிலைமையை புரிந்து கொண்டுபேசிய அரசியல், கட்சிகளை சார்ந்த நண்பர்கள், தலைவர்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

கிட்டதட்ட 5 மாவட்டத்துக்கு பிரசாரத்துக்கு போனோம். இதுமாதிரி எதுவும் நடக்கவில்லை. கரூரில் மட்டும் நடக்கிறது. எப்படி நடக்கிறது. மக்களுக்கு எல்லா உண்மையும் தெரியும். மக்கள் அனைத்தையும் பார்த்து கொண்டு உள்ளனர். கரூரைச் சேர்ந்த மக்களை உண்மையை எல்லாம் வெளியில் சொல்லும் எனக்கு கடவுளே நேரில் வந்து உண்மையை சொல்வது போல் தெரிந்தது.

விரைவில் அனைத்து உண்மைகளும் வெளியில் வரும். எங்களுக்கு தரப்பட்ட இடத்தில் நாங்கள் நின்று பேசி வந்தது தாண்டி நாங்கள் எந்த தவறும் செய்யவில்லை. எதுவம் செய்யவில்லை.இருந்தாலும் கட்சி நிர்வாகிகள்,தோழர்கள் மீது வழக்குப் பதிவு, சமூக வலைதளத்தை சேர்ந்த நண்பர்கள் மீது வழக்குப்போட்டு கைது செய்கின்றனர்.சிஎம்சார், உங்களுக்கு ஏதாவது பழிவாங்கும் என்ற எண்ணம் இருந்தால், என்னை என்ன வேண்டுமானாலும் பண்ணுங்கள். அவர்கள் மீது கை வைக்காதீர்கள். நான் ஒன்று வீட்டில் இருப்பேன். அல்லது அலுவலகத்தில் இருப்பேன். என்னை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். நண்பர்களே, தோழர்களே, நமது அரசியல் பயணம் இன்னும் வலிமையாக, இன்னும் தைரியத்துடன் தொடரும். நன்றி. என்று குறிப்பிட்டுள்ளார்.

---

# தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகி ஆதவ் அர்ஜுனா மீது வழக்கு பதிவு

தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகி ஆதவ் அர்ஜுனா தனது எக்ஸ் தளப் பக்கத்தில் சர்ச்சைக்குரிய கருத்து ஒன்றை வெளியிட்ட நிலையில், அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கரூரில் த.வெ.க. தலைவர் விஜய் பிரச்சாரக் கூட்டத்தில் நிகழ்ந்த நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்திய நிலையில், த.வெ.க. தேர்தல் பிரசார மேலாண்மை பிரிவு பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா தனது எக்ஸ் தளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டார்.

அந்தப் பதிவில், 'வீதியில் நடந்து சென்றாலே தடியடி. சமூக வலைதளங்களில் கருத்து பதிவிட்டாலே கைது. இப்படி ஆளும் வர்க்கத்தின் அடிவருடிகளாக பொலிஸ் மாறி போனால் மீட்சிக்கு இளைஞர்களின் புரட்சிதான் ஒரே வழி.




எப்படி இலங்கையிலும், நேபாளத்திலும் இளைஞர்களும், ஜென் ஸீ தலைமுறையும் ஒன்றாய் கூடி அதிகாரத்துக்கு எதிரான புரட்சியை உருவாக்கிக் காட்டினார்களோ, அதேபோல இங்கும் இளைஞர்களின் எழுச்சி நிகழும். அந்த எழுச்சிதான் ஆட்சி மாற்றத்துக்கான அடித்தளமாகவும் அரச பயங்கரவாதத்துக்கான முடிவுரையாகவும் இருக்கபோகிறது. பேய் அரசாண்டால் பிணந்தின்னும் சாஸ்திரங்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பதிவை வெளியிட்ட சற்று நேரத்திலேயே தனது எக்ஸ் தளத்தில் இருந்து பதிவை ஆதவ் அர்ஜுனா நீக்கி விட்டார். ஆனாலும், அவர் பதிவிட்ட கருத்து சமூக வலைதளங்களில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில்தான், கலவரத்தை தூண்டும் வகையில் கருத்து வெளியிட்டார் என்று , ஆதவ் அர்ஜுனா மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.





# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு: 10 பேர் பலி; 32 பேர் காயம்

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாண தலைநகர் குவெட்டாவில் உள்ள துணை இராணுவப் படை தலைமையகத்தை ஒட்டி நிகழ்ந்த சக்திவாய்ந்த குண்டுவெடிப்பில் 10 பேர் கொல்லப்பட்டனர், 32 பேர் காயமடைந்துள்ளனர்.

குவெட்டாவில் உள்ள சர்குன் சாலையில் பாகிஸ்தான் துணை இராணுவப் படையின் தலைமையகம் உள்ளது. இந்த தலைமையகத்தின் ஓரத்தில் வீதியை ஒட்டிய பகுதியில் நேற்று பிற்பகல் சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. வீதியில் வாகனங்கள் சென்று கொண்டிருந்த நிலையில், இந்த குண்டு வெடித்தது. இது குறித்த சி.சி.டி.வி. காட்சிகள் சமூக ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளன.

குண்டுவெடிப்பு மிகவும் சக்திவாய்ந்ததாக இருந்ததால், அருகில் இருந்த கட்டடங்கள், வீடுகள் ஆகியவற்றின் ஜன்னல்கள் உடைந்து சேதமடைந்தன என்று ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன. குண்டுவெடிப்பின் சத்தம், அருகில் இருந்த நகர்களிலும் கேட்டதாகக் கூறப்படுகிறது. குண்டுவெடிப்பு நிகழ்ந்த சிறிது நேரத்தில் துப்பாக்கிச் சூடும் கேட்டதாக செய்திகள் வெளியாகி உள்ளன. இதனால் அச்சமடைந்த மக்கள், வீட்டை விட்டு வெளியே வராமல் இருந்துள்ளனர்.




தகவல் அறிந்ததும் சம்பவ இடத்துக்கு விரைந்த பாதுகாப்புப் படையினர், காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும், உயிரிழந்தவர்களின் உடல்கள் பிரேதச பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டன. சம்பவத்தை அடுத்து நகரில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது. குண்டுவெடிப்பு நிகழ்ந்த இடம்சுற்றிவளைக்கப்பட்டுள்ளதாகவும், தேடுதல் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட வாகனம் துணை இராணுவப் படையின் தலைமையகம் அருகே திரும்பியபோது குண்டுவெடிப்பு நிகழ்ந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த குண்டுவெடிப்பில் 10 பேர் கொல்லப்பட்டனர். 5 பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்ட நிலையில், மற்றவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். காயமடைந்தவர்கள் சிவில் மருத்து வமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்று பலுசிஸ்தான் சுகாதார அமைச்சர் பக்த் முகமது தெரிவித்துள்ளார்.




# ட்ரம்பின் காசா போர் நிறுத்த திட்டம்: பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றார்

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் காசா போர் நிறுத்த திட்டத்தை வரவேற்பதாக இந்தியப் பிரதமர் மோடி சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

காசா போர் நிறுத்தம் தொடர்பாக, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பேச்சு வார்த்தை நடத்தினர்.

பின்னர் காசா போர் நிறுத்தத்துக்கான விரிவான திட்டத்தை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஏற்றுக் கொண்டார் என ட்ரம்ப் அறிவித்தார்.

அதைத்தொடர்ந்து, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நடத்திய பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

ட்ரம்பின் போர் நிறுத்த யோசனைகளை இஸ்ரேல் ஏற்றுக் கொண்டது.

இது குறித்து பிரதமர் மோடி சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “காசா போர் நிறுத்தம் குறித்த ஜனாதிபதி ட்ரம்பின் விரிவான திட்டத்தை வரவேற்கிறோம். மேலும், ட்ரம்பின் திட்டம் பாலஸ்தீன, இஸ்ரேலிய மக்களுக்கு நீண்டகால மற்றும் நிலையான அமைதியை வழங்குகிறது.” எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ட்ரம்பின் திட்டங்களை வரவேற்று எட்டு அரபு மற்றும் முஸ்லிம் நாடுகள் ஒரு கூட்டு அறிக்கையை வெளியிட்டன.

கட்டார், ஜோர்டான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், இந்தோனேசியா, பாகிஸ்தான், துருக்கி, சவூதி அரேபியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளின் அமைச்சர்கள் ட்ரம்பின் செயல்பாடுகளுக்கு பாராட்டு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள்- 01.10.2025




இன்று பதற்றமும் கவனமின்மையும் காணப்படும். இதனை சமாளிக்க அமைதியை மேற்கொள்ள வேண்டும். இன்று சகஜமான அணுகுமுறையுடன் உங்கள் பணிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடத்தில் பதட்டம் காரணமாக தாமதமாக பணிகள் நடைபெறும். பணிகளைக் கையாளும் போது பொறுமையான அணுகுமுறை தேவை.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதும் நட்பான அணுகுமுறை கொள்வதும் இருவரும் மகிழ்ச்சியுடன் இருக்க உதவும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும் . அதிகரிக்கும் செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

பதற்றம் காரணமாக தலைவலி ஏற்படலாம். இறை வழிபாடும் பிரார்த்தனையும் மேற்கொள்வது சிறந்தது.




இன்று ஸ்திரமான, இலக்குகளை வெல்லக்கூடிய இனிமையான தருணங்களை சந்திக்கும் நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

பணியிடத்தில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். புதிய பணி வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக இருப்பதன் மூலம் நல்லுறவு வளரும். இருவரிடையே பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படும்.

பண வரவு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் கடின உழைப்பின் காரணமாக நீங்கள் ஊக்கத் தொகை வகையில் பணம் பெறுவீர்கள்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றையநாள்உங்கள்எதிர்பார்ப்பின்படி இருக்காது. எதிர்மறையான பலன்கள் ஏமாற்றத்தை தரும். எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு தடவை யோசிக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களையும் பாதுகாப்பின்மை உணர்வையும் தவிர்த்தல் வேண்டும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சிறந்த புரிந்துணர்வை பராமரிக்க இயலாது. உங்களின் எரிச்சல் உணர்வை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும். அதிக செலவுகள் காரணமாக சேமிப்பது கடினமாக இருக்கும்.

கோபத்தின் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படும். உங்கள் நலனுக்காக பிரார்த்தனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று சவாலான சூழ்நிலைகள் காணப்படும். அதனால் வெறுமையை உணர்வீர்கள். உறுதியான போக்கை மேற்கொள்வதன் மூலம் நீங்கள் பிரச்சினைகளை சமாளிக்க முடியும்.

உங்கள் கடின உழைப்பிற்கு தகுந்த பலன்கள் கிடைக்காது. இதற்குஉங்கள் பணிகளை சிறப்பாக திட்டமிடாததே காரணம்.

உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். இதனை உங்கள் துணையிடத்தில் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று லாபம் நஷ்டம் இரண்டும் சேர்ந்து காணப்படும். பணப்புழக்கம் குறைவாக காணப்படும். பண இழப்புகளை தவிர்க்க நீங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

பதட்டம்காரணமாகஆரோக்கியம்பாதிக்கப்படும்.ஆரோக்கியமாய் இருக்க இந்த உணர்வை தவிர்த்தல் நல்லது.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும்.. ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் இந்தச் சூழலைக் திறமையாகக் கையாள முடியும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பயனுள்ள யுத்திகளைக் கையாண்டு கவனமாக பணியாற்றினால் பணிகள் சுமூகமாக நடக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. இதனால் உறவின் நல்லிணக்கத்தைக் கெடுக்கும் கவனமற்ற வார்த்தைகளை தவிர்க்கலாம்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். சளி சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று விரைந்து செயலாற்றுவீர்கள். இன்றைய நாளை சிறப்பாக பயன்படுத்துவீர்கள், புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவைப் பராமரிப்பீர்கள். பணியில் உங்கள் நேர்மை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் நேர்மையான அணுகுமுறை மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் நிலைமை உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

சிறிய கடன் பெறுவதன் மூலம் உங்கள் பணத் தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்துகொள்வீர்கள். இருக்கும் பணத்தை குடும்பத்திற்காக செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படுகின்றது.




இன்று நீங்கள் நம்பிக்கையுடன் இருந்தால் உங்கள் இலக்குகளில் வெற்றி அடையலாம்.பதட்டம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வை கட்டுப்படுத்தி நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

உங்கள் பணியில் சில தடைகள் காணப்படும். உறுதியுடன் இருந்தால் தடைகளை சமாளித்து சிறப்பாக செயலாற்றலாம்.

தகவல் பரிமாற்ற பிரச்சினையும் கருத்து வேறுபாடும் காணப்படும். அமைதியாக இருப்பது மிகவும் உதவிகரமாக இருக்கும்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்காது. இந்து கூடுதல் செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. வயிற்று உபாதை காரணமாக அவதிப்பட நேரலாம்.




அமைதியாக இருப்பதன் மூலம் முறையான முடிவுகளை எடுக்க இயலும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் பதட்டமின்றி சம நிலையில் இருக்கலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இதனால் பணியில் தவறுகள் நேரலாம். எனினும் கவனமாகப் பணியாற்றினால் இன்று சிறப்பாக இருக்கும்.

இன்று உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை பராமரிப்பது நல்லது. இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் காணப்படும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. அதிகரிக்கும் பொறுப்புகளை சமாளிப்பது கடினமாக உணர்வீர்கள்.

பதற்றம் காரணமாக முதுகு வலி ஏற்படலாம். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள்- 01.10.2025




இன்று நீங்கள் எளிதான அணுகு முறையை மேற்கொள்ள வேண்டும். உரையாடும் போது வார்த்தைகளில் கவனம் தேவை. இனிமையான வார்த்தைகள் நல்ல பலனைத் தரும்.

இன்று புதிய பணி வாய்ப்புகளை இழக்கும் அதிர்ஷ்டமற்ற நிலை காணப்படும். இன்று ஏமாற்றமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். இதனால் உங்கள் மன உறுதியை இழந்து விடாதீர்கள்.

உங்கள் துணையுடன் சச்சரவு ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் சூடான விவாதங்கள் ஏற்படலாம். இது மகிழ்சியைக் குறைக்கும்.

இன்று பண வரவிற்கான வாய்ப்பு குறைவு. பண இழப்பு ஏற்படும் என்பதால் பணத்தை கவனமாக கையாள வேண்டியது அவசியம்.

பல் வலி மற்றும் தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் குளிர்ந்த உணவு வகைகளை தவிர்ப்பது நல்லது.




இன்று உங்களிடம் தைரியமான உறுதியான அணுகுமுறை காணப்படும். உங்கள் இலக்குகளில் வளர்ச்சியும் வெற்றியும் அடைவீர்கள்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது. உங்கள் செயல்திறனில் நல்ல தரத்தை பராமரிக்க இயலும்.

உங்கள் மகிழ்ச்சியான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இருவரும் மகிழ்ச்சியான தருணங்களை இணைந்து கொண்டாடுவீர்கள்.

அதிக பண வரவு காரணமாக உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். உங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




உங்கள் மன உறுதி காரணமாக நீங்கள் வெற்றி பெறலாம். இன்று சிறந்த முன்னேற்றம் கண்டு மகிழ்வீர்கள்.

உங்கள் திறமைகள் வெளிப்படும். அது உங்கள் செயல்திறனில் பிரதிபலிக்கும். உங்கள் சக பணியாளர்களுக்கு நீங்கள் ஒரு எடுத்துக்காட்டாக இருப்பீர்கள்.

இனிமையான வார்த்தைகளும் நல்ல புரிந்துணர்வும் உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க உதவும்.

இன்று போதிய அளவு பணம் காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

இன்று உங்களிடம் அதிக ஆற்றல் காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இந்த நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்




இன்று நீங்கள் நம்பிக்கையுடன் உங்கள் செயல்களை மேற்கொள்ளும் வாய்ப்பு உள்ளது. புதிய நண்பர்களைப் பெறுவீர்கள். அவர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள்.உங்கள் செயல்திறன் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும். உங்களுக்கு பாராட்டு கிடைக்கும்.

நேர்மையான அணுகுமுறை மூலம் உங்கள் துணையுடன் சுமூகமான உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சாதாரணமாக இருக்கும். உங்களிடம் இன்று மன உறுதி காணப்படும்.

# ஒலுவில் - களியோடை ஆற்று பகுதியில் மீட்கப்பட்டதாக கூறப்படும் குழந்தையின் தாய் - தந்தை இருவரும் கைது!

## விசாரணையில் திடுக்கிடும் விடயங்கள் அம்பலம்



**(கே.எ.ஹமீட்)**

ஒலுவில் – களியோடை ஆற்றை அண்டிய பகுதியில், கைவிடப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டதாக கூறப்படும் குழந்தையின் பெற்றோரை, அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குழந்தையின் தந்தை ஒலுவில் பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும், தாய் நிந்தவூரை பிரதேசத்தவர் எனவும் அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தார்கள்.

தாய் மற்றும் தந்தை ஆகிய இருவரும் 17 வயதையுடையவர்கள் எனவும், அவர்களுக்கு திருமணமாகாத நிலையிலேயே, இந்தக் குழந்தை பிறந்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் கூறினர்.

குழந்தையின் தாயும் – தந்தையும் காதலித்து வந்த நிலையில், தந்தையின் உறவினர்கள், இவர்களின் காதலுக்கு எதிர்ப்பை தெரிவித்து வந்ததாக அறிய முடிகிறது. இவ்வாறான நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை (28ஆம் திகதி) அந்தப் பெண் தனது வீட்டில் சிசுவைப் பிரசவித்துள்ளார்.

இவ்விடயத்தை அறிந்து கொண்ட குழந்தையின் தந்தை, அவரின் காதலியின் வீடு சென்று "எனது குழந்தையை நான் வளர்க்கிறேன் தாருங்கள்" என்று பெற்றுக்கொண்டு வந்துள்ளார் என, விசாரணைகளில் தெரிய வந்துள்ளது என்று, அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, குழந்தையின் தந்தை – அவரின் சின்னம்மா (தாயின் சிறிய சகோதரி) ஒருவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, களியோடை ஆற்றுப் பகுதியில் கைவிடப்பட்டுள்ள பெண் குழந்தையொன்றைக் கண்டெடுத்துள்ளேன், உங்களுக்கும் பெண் குழந்தை இல்லை, எனவே, இந்தக் குழந்தையை வளர்ப்பீர்களா என்று கேட்டுள்ளார். அதற்கு அவரின் சின்னம்மாவும் சம்மதித்துள்ளார்.

இந்த நிலையில், குழந்தையின் தொப்புள்கொடி வெட்டப்பட்ட பகுதிக்கு, முறையாக சிகிச்சையளிக்கப்படாமையினாலும், அந்த இடத்திலிருந்து இரத்தம்கசிந்ததாலும், ஒலுவில் வைத்தியசாலைக்கு அந்தக் குழந்தையை அவர்கள் கொண்டு சென்றனர்.

இதனையடுத்தே, 'குழந்தையொன்று ஒலுவில் – களியோடை ஆற்றை அண்டிய பகுதியில், நபரொருவரால் கண்டெடுக்கப்பட்டதாக' கதை பரவியது.

இந்தப் பின்னணியில்தான், குழந்தையின் தாய் மற்றும் தந்தை ஆகியோரை, அக்கரைப்பற்றுபொலிஸார்கைதுசெய்து, தற்போது – அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

முன்னராக, குறித்த குழந்தை, ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவியொருவருடையதாக இருக்கலாம் என – சமூக ஊடகங்களில் சிலர் அபாண்டமாக எழுதியிருந்தனர். அவ்வாறு எழுதப்பட்டமையைக் கண்டித்து, அந்தப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், சமூக ஊடகத்தில் பதிவொன்றை இட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள்